இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 31, 18 ஒக்டோபர் 2024 இதழ்:- 20

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## சிங்கள தேசத்தில் எற்பட்ட புதிய மாற்றம்! அரசியல்வாதிகள் பலர் தாமாகவே ஓய்வு!



கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தின் ஐம்பதுக்கும் அதிகமான உறுப்பினர்கள் இந்த தடவை பொதுத் தேர்தலில் போட்டியிடவில்லை. இலங்கையின் அரசியல் வரலாற்றில் முன்னென்றும் இவ்வாறு நடந்ததில்லை. முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சரகள் மாத்திரமல்ல எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த பலரும் இதில் அடங்குகிறார்கள். சிலர் முற்றாகவே அரசியலில் இருந்து ஓய்வு(3ம் பக்கம் பார்க்க)

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

## அரசியல் கோமாளிகளின் கும்மாளத்தினால் பொதுக்கட்டமைப்பு தற்போது இல்லையென மக்களிடம் மன்னிப்புக் கோருகிறார் நிலாந்தன்




மக்கள் நாணயமானவர்களுக்கும், கறைபடியாதவர்களுக்கும் தேச திரட்சிக்காக உழைப்பவர்களுக்கும் மக்கள் வாக்களிக்க வேண்டும் என பொதுக் கட்டமைப்பை சேர்ந்த நிலாந்தன் தெரிவித்துள்ளார். யாழ். ஊடக அமையத்தில் 13 ஒக் 2024 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்கள் பொதுச்சபை ஜனாதிபதி தேர்தலை கையாண்ட போன்று, மற்றைய தேர்தல்களை கையாள முடியாததால் (6ம் பக்கம் பார்க்க)

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife
Foresters

## 13வது திருத்தமும் அதிகாரப் பகிர்வும் அவசியமில்லை! ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின்சில்வா!

வடக்கு மக்களுக்கு 13ஆவது திருத்தச் சட்டமும், அதிகாரப் பகிர்வும் அவசியமாக இல்லை என்பதுடன், பொருளாதார பிரச்சினைகளுக்கே தீர்வு அவசியமாக உள்ளது. (4ம் பக்கம் பார்க்க)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

ஈழநாடு:- மின்னிதழில் வாசிக்க
eelanadu.ca

# மீண்டும் வலுக்கும் கனடா - இந்தியா பிரச்சனை!

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!



என் இனிய உறவுகளே! இவர்களுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 23 செப்டம்பர் முதல் 14 வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி. தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX
ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



21 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

**Bus: 416.298.3200**
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

**Simcoe St N. & Conlin Rd**



**Oshawa** $279,000
0 Beds • 1 Bath • 1 Rooms
Welcome To University Studios!

**Sheppard Ave & Allen Rd**




**Toronto** $619,000
2+1 Beds • 2 Baths • 4+1 Rooms
Close To Subway, Ttc, York University

**Neilson/Tapscott**



**Scarborough** $445,000
2 Beds • 2 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC

**Kennedy Rd / Hwy 401**




**Scarborough** $699,000
2+1 Beds • 2 Bath • 6 Rooms
Freshly painted & renovated!

**Sheppard & Neilson**



**Malvern** $699,900
3 Beds • 2 Baths • 6 Rooms
Low Maintenance Fees!

**Simcoe St N/ Brittania Ave**




**Oshawa** $770,000
4 Beds • 3 Baths • 9 Rooms
Corner lot Just like Semi Townhouse

**McLevin Ave & Morningside**




**Malvern** $880,000
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Finished Basement

**Townline Rd & Shankel Rd**



**Oshawa** $999,900
3 Beds • 4 Baths • 8 Rooms
Close To Highway 401, 418, 407

**Sheppard Ave E / Neilson Rd**




**Scarborough** $842,000
3 Beds • 3 Baths • 6+2 Rooms
FULLY RENNOVATED

**Church St N & Rossland Rd W**



**Ajax** $899,999
3 Beds • 3 Baths • 6 Rooms
Hardwood flooring throughout

**Church St N & Rossland Rd W**



**Ajax** $899,999
3 Beds • 3 Baths • 6 Rooms
Upgraded Hardwood Floors

**Kellough St/ Mcneil St**



**Innisfil** $1,295,000
4+1 Beds • 5 Baths • 11+3 Rooms
Open concept, large eat-in kitchen

**Ninth Line/Donald Cousens**



**Markham** $630,000
2 Beds • 2 Baths • 4 Rooms
Minutes to Stouffville Hospital


**Mara & King**



**Beaverton** $729,800
4 Beds • 3 Baths • 9 Rooms
2300 Square Foot Home

**Finch Ave E/ Morningside Ave**


FOR LEASE



**Scarborough** $2,500
3+1 Beds • 3 Bath • 10+3 Rooms
Nicely Maintained And Cleaned

**Scarborough Golf/Lawrence Ave**

FOR LEASE



**Scarborough** $1,900
2 Beds • 1 Bath • 4 Rooms
Lovely Corner Bungalow

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# சிங்கள தேசத்தில் எற்பட்ட புதிய மாற்றம்! அரசியல்வாதிகள் பலர் தாமாகவே ஓய்வு!



கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தின் ஐம்பதுக்கும் அதிகமான உறுப்பினர்கள் இந்த தடவை பொதுத் தேர்தலில் போட்டியிடவில்லை. இலங்கையின் அரசியல் வரலாற்றில் முன்னென்றும் இவ்வாறு நடந்ததில்லை. முன்னாள் ஜனாதிபதிகள், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சரகள் மாத்திரமல்ல எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த பலரும் இதில் அடங்குகிறார்கள்.

சிலர் முற்றாகவே அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாகவும் அறிவித்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் தங்களது தீர்மானத்துக்கு பல்வேறு காரணங்களை கூறியிருக்கின்ற போதிலும், உண்மையான காரணம் தேர்தலில் தங்களை மக்கள் நிராகரிப்பார்கள் என்ற பயத்தை தவிர வேறு ஒன்றும் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம். தோல்வி நிச்சயம் என்று தெரிந்தாலும், ஒதுங்கியிருக்கவோ அல்லது அரசியலில் இருந்து விலகவோ மனமில்லாத சில மூத்த அரசியல்வாதிகள் மாத்திரமல்ல இளையவர்களும் கூட வெட்கங் கெட்ட முறையில் தங்களது கட்சிகளின் அல்லது கூட்டணிகளின் தேசியப்பட்டியலுக்குள் புகுந்து விட்டார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் பாரம்பரிய அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களை நிராகரித்து தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்கவை மக்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்யாமல் விட்டிருந்தால் இந்த அரசியல்வாதிகளில் எவரும் பாராளுமன்றத் தேர்தலில் இருந்து ஒதுங்குவது குறித்தோ அல்லது அரசியலில் இருந்து ஓய்வு பெறுவது குறித்தோ ஒரு போதும் சிந்தித்திருக்கவே மாட்டார்கள். ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றி இலங்கை அரசியலில் ஓய்வு என்ற ஒரு புதிய அம்சத்தை அறிமுகப்படுத்தியிருப்பதாகவும் அல்லாவிட்டால் அரசியல்வாதிகள் தோல்வி கண்டால் அல்லது இறந்தால் மாத்திரமே அவர்களின் ஓய்வைக் கண்ட ஓர் ஆரோக்கியமற்ற அரசியல் கலாசாரமே இலங்கையில் நீடித்து வந்ததாகவும் ஜனாதிபதி திசாநாயக்கவும் தேசிய மக்கள் சக்தியின் பல தலைவர்களும் பெருமையுடன் கூறுகிறார்கள்.

நாட்டின் சமூக, அரசியல், பொருளாதார நெருக்கடிக்கு காரணமான ஜனாதிபதிகளுக்கு உறுதுணையாகச் செயற்பட்ட பலர் எதிர்க்கட்சிகளின் வேட்பாளர்கள் பட்டியலில் இடம் பெறுகிறார்கள். ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் கூறிய செய்தியை அவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்வில்லைப் போலும். தவறான ஆட்சிமுறைக்கும் ஊழல் மோசடிகளுக்கும் உறுதுணையாகச் செயல்பட்ட எஞ்சிய அரசியல்வாதிகளையும் அரசியல் பக்கமே இனிமேல் அவர்கள் திரும்பிப் பார்க்கவே நினைக்காத முறையில் பாராளுமன்ற தேர்தலில் தோற்கடித்து வீட்டுக்கு அனுப்புவதற்கு பாராளுமன்ற தேர்தலை மக்கள் பயன்படுத்த வேண்டும். இது தெற்கிற்கு மாத்திரமல்ல, வடக்கு, கிழக்கிற்கும் பொருந்தும். தமிழ் மக்கள் செய்வார்களா?

# யாஹ்யா சின்வர் கொல்லப்பட்டாலும் இஸ்ரேலுக்கு எதிரான எங்கள் போராட்டம் தொடரும் - பாலஸ்தீனிய மக்கள்

யாஹ்யா சின்வர் கொல்லப்பட்டுள்ள போதிலும் இஸ்ரேலிற்கு எதிரான யுத்தம் தொடரும் என பாலஸ்தீன மக்கள் உறுதி வெளியிட்டுள்ளனர்.

அழிவடைந்த யுத்தத்தினால் சிதையுண்டு போயுள்ள கான் யூனிசில் உள்ள பாலஸ்தீனியர்கள் யாஹ்யா சின்வர் கொல்லப்பட்டுள்ள போதிலும் யுத்தம் தொடரும் என உறுதியாக தெரிவிக்கின்றனர் என பிபிசி செய்தி வெளியிட்டுள்ளது.

பிபிசி சுயாதீன செய்தியாளர்களை பயன்படுத்தி பாலஸ்தீனியர்களின் கருத்தினை பெற்றுள்ளது (இஸ்ரேல் பிபிசியை பாலஸ்தீனத்திற்குள் அனுமதிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.)


இந்த யுத்தம் யாஹ்யா சின்வரையோ அல்லது வேறு எவரையுமோ நம்பியிருக்கவில்லை எந்த தலைவர் அல்லது அதிகாரி மீது நம்பிக்கையை வைத்து இந்த யுத்தத்தை பாலஸ்தீனிய மக்கள் முன்னெடுக்கவில்லை என வைத்தியர் ரமடான் பாரிஸ் என்பவர் தெரிவித்துள்ளார். இது பாலஸ்தீன மக்களிற்கு எதிராக முன்னெடுக்கப்படும் அழிப்பு போர், பிரச்சினை என்பது யஹ்யா சின்வரை விட மிகப்பெரியது என அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் எங்களை மாத்திரம் அழிக்க விரும்பவில்லை, அவர் முழு மத்திய கிழக்கையும் அழிக்க விரும்புகின்றனர் அவர்கள் லெபனானில் சிரியாவில் யேமனில் போரிடுகின்றனர் என அட்னன் அசூர் என்பவர் தெரிவித்துள்ளார். எங்களிற்கும் யூதர்களிற்கும் இடையிலான யுத்தம் 100 வருடங்களிற்கு மேல் 1919ம் ஆண்டிலிருந்து இடம் பெறுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

சின்வரின் மரணம் ஹமாசிற்கு பாதிப்பை ஏற்படுத்துமா என்ற கேள்விக்கு நான் அப்படி நினைக்கவில்லை ஹமாஸ் என்பது சின்வரில்லை அது மக்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு விடுத்துள்ள வீடியோ செய்தியில் யஹ்யா சின்வர் கொல்லப்பட்டதன் மூலம் இந்தப் போரில் மிக முக்கிய இலக்கை நாங்கள் எட்டியுள்ளோம். மிகப் பெரிய யூத இனப் படுகொலைக்குப் பின்னர் எங்கள் மக்களின் மீது மோசமாக தாக்குதலை நடத்தியவரின் கணக்கைத் தீர்த்துள்ளோம்.

இருப்பினும் ஹமாஸ் மற்றும் ஈரான் ஏவிவிட்டுள்ள பயங்கரவாதிகளுக்கு எதிரான எங்களின் போர் இன்னும் முடிவடையவில்லை. கடினமான



நாட்கள் இன்னும் இருக்கின்றன. இறுதியில் நாங்கள் நிச்சயம் வெல்வோம் ஹமாஸ் அமைப்பினரால் பிடித்துச் செல்லப்பட்ட பிணைக் கைதிகளை விடுவித்தால் போர் நாளை முடிவுக்கு வரும் என இஸ்ரேலியப் பிரதமர் பென்சமின் நெதன்யாகு தெரிவித்தார்.

ஹமாஸ் தலைவர் யாஹ்யா சின்வாரின் மரணம் குறித்து பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இணையத்தில் வெளியிடப்பட்ட வீடியோவில் ஆங்கிலத்தில் பேசியிருந்த போது இக்கருத்தை வெளியிட்டார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# 13வது திருத்தமும் அதிகாரப் பகிர்வும் அவசியமில்லை!

## ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின்சில்வா கருத்து



வடக்கு மக்களுக்கு 13ஆவது திருத்தச் சட்டமும், அதிகாரப் பகிர்வும் அவசியமாக இல்லை என்பதுடன், ஷ பொருளாதார பிரச்சினைகளுக்கே தீர்வு அவசியமாக உள்ளது. ஆனால், தமிழ் அரசியல்வாதிகள் தங்களது அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள இந்த வசனங்களை பயன்படுத்தி வருகின்றனர். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

வடக்கில் பல்வேறு முரண்பாடுகள் உள்ளன. மொழி ரீதியான பிரச்சினை அங்கு உள்ளது. அரச அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் தாம் விரும்பும் மொழியில் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாதுள்ளது. கொழும்பை மையப்படுத்தியுள்ள சில வசதி, வாய்ப்புகள் வடக்கிற்கு செல்வதில்லை. யாழ்ப்பாணத்தில் ஓரளவு தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய வசதிகள் உள்ள போதிலும் கிளிநொச்சி, வவுனியா அல்லது முல்லைத்தீவில் வாழும் மக்கள் மிகவும் கஷ்டமான வாழ்கையையே வாழ்கின்றனர். இங்குள்ளவர்கள் கல்வி முதல் அனைத்து விடயங்களையும் பெற்றுக் கொள்வதில் நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். இந்த மக்கள் மிகவும் வறுமைக்கு உட்பட்டவர்களாக உள்ளனர். தெற்கில் இருந்து வடக்கிற்கு செல்லும் பாதை அழகாக உள்ளது. பாதையின் இருபுறங்களிலும் கடைகள் உள்ளன.

ஆனால், பாதையை தாண்டி உள்ளே சென்றால் வீடுகள் இல்லை, மக்கள் வறுமையாகவும் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாதும் வாழ்கின்றனர். உள்பாதைகள் மிகவும் மோசமான முறையில் புனரமைக்கப்படாது புழுதிகளுடன் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் சிலர் வெளிநாடுகளில் இருப்பதால் ஓரளவு பொருளாதாரம் உள்ளது. ஆனால், வவுனியா அல்லது கிளிநொச்சி சென்றால் அங்கு பொருளாதார இல்லை. முல்லைத்தீவில் வாழும் மீனவர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பழங்களையும், மரக்கறிகளையும் விற்பனை செய்துக்கொள்ள உரிய சந்தை வாய்ப்புகள் இல்லை. வேலை வாய்ப்புகள் மிகவும் குறைவாகும்.

தெற்கில் இருந்து அங்கு சென்று சுற்றுலாவில் நாம் ஈடுபட்டு வருகிறோம். ஆனால், அங்குள்ள மக்களின் வாழ்கை முள்ளின் மேல் உள்ளது. பொது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி தேடுவதே அவசியமாக உள்ளது. காணி முரண்பாடுகள் நீண்டகாலமாக உள்ளன.

யுத்தக்காலத்தில் தமது காணியை கைவிட்டு வெளியேறி மக்கள் யுத்தம் நிறைவடைந்து சென்ற போது அந்த காணிகளை வேறு நபர்கள் கைப்பற்றி குடியேறியுள்ளனர். அரசாங்கம் தலையீடு செய்து அந்தப் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது.

பிரச்சினைகள் அவ்வாறுள்ளன. ஆனால், இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்காத வடக்கின் தமிழ் அரசியல் தலைவர்கள், தமது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள 13ஆவது திருத்தச்சட்டம் மற்றும் அதிகாரப்பகிர்வு போன்ற வசனங்களை பயன்படுத்திக் கொண்டனர்.

ஆனால், வடக்கின் அடித்தட்டு மக்களுக்கு 13ஆவது திருத்தச் சட்டம் அவசியமில்லை. அவர்களுக்கு அதிகாரப்பகிர்வு அவசியமில்லை. அவர்களுக்கு விசாயத்தை மேற் கொள்ள நீர் வசதிகளும், அவற்றை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளும், கல்வியும், நல்ல வைத்தியசாலைகளுமே அவசியமாக உள்ளன.

எமது நாட்டில் ஒருவர் கடவுச் சீட்டை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால் அவர் கொழும்புக்கு கட்டாயம் வரவேண்டிய தேவையுள்ளது. கண் பரிசோதனைகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வர வேண்டியுள்ளது. அனைத்தும் கொழும்பை மையப்படுத்தியுள்ளன. இவ்வாறு கொழும்பை மைப்படுத்தியுள்ள அனைத்து விடயங்களும் நாட்டின் அனைத்து பிரதேசங்களுக்கும் செல்லும் போது மக்களின் பிரச்சினைகள் தீரும்.

குறிப்பாக எமது நாட்டில் உற்பத்தி பொருளாதார முறைமையொன்று உருவாக்கப்பட வேண்டும். அந்தப் பொருளாதாரத்தின் பங்காளிகளாக அனைத்து பிரதேச மக்களும் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்பதுடன் அந்த பொருளாதாரத்தின் பிரதிபலன்களும் அவர்களுக்கு கிடைக்க வேண்டும் என்றார்.




கனடா - அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அனைத்து அம்பாள் அடியார்களிற்கும் வணக்கம்!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக்களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி — நிர்வாகசபை

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# தமிழரசுக்கட்சியை விட்டு ஒருபோதும் செல்ல மாட்டேன்!



நான் தமிழரசுக்கட்சியை விட்டு ஒரு போதும் செல்ல மாட்டேன் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் தெரிவித்த அவர், என்னுடைய கட்சியென்பது இலங்கை தமிழரசுக் கட்சி தான் அந்தக்கட்சியை விட்டு போகின்ற எண்ணமும் விலகியிருக்கின்ற எண்ணமும் என்னிடம் இல்லை. சிலர் என்னை வீழ்த்தி விட போராடினாலும் கடைசிவரை போராடுவேன்.

இலங்கை தமிழரசு கட்சியென்பது தமிழர்களுடைய சுயநிர்யண உரிமையை அடித்தளமாக வைத்து சமஸ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை அடிநாதமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கட்சியாகும்.

அதனுடைய கொள்கை பிறழாது அதனுடைய தாகம் தீராது அடிப்படை வரலாறுகளை நிராகரிக்காமல் தமிழரசுக்கட்சி இப்பொழுதும் நிலையான பயணத்தை செய்கின்றது.

தென்னிலங்கையில் தற்போது நடந்துள்ள அரசியல் மாற்றம், அது ஒரு வேளை மாயையாக இருக்கலாம். மாற்றம் நடப்பது நல்லது, அவ்வாறு நல்லது நடைபெறும் போது நாமும் மாற்றத்தோடு சேர்ந்து பயணிப்போம் என தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு கூறிக் கொள்கின்றோம்.

கடந்த காலங்களில் நடந்ததை தான் நீங்களும் செய்வீர்களானால் வரலாறு மீண்டும் ஒரு கதையை சொல்லும். என்றார்.

# தீர்வு என்ன என வெளிப்படையாகக் கூறாத தேசிய மக்கள் சக்தியிடம் மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது! தந்தை செல்வாவின் பேரன் இளங்கோவன் பேச்சு!




தமிழர்களுக்கு என்ன தீர்வு என வெளிப்படையாக கூறாத தேசிய மக்கள் சக்தியிடம் இருந்து மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது என இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளர் சந்திரஹாசன் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக விழா கடந்த 13 ஒக் 2024 ஞாயிற்றுக் கிழமை யாழில். உள்ள தந்தை செல்வா கலையரங்கில் இடம் பெற்றது. அங்கு உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

தென்பகுதியில் ஒரு மாற்றம் இடம் பெற்றிருக்கிறது. ஊழலுக்கு எதிரான அரசு வேண்டும், எல்லோரும் சமமானவர்கள், எல்லோரும் இலங்கை மக்கள் என்று ஒரு மாற்றத்திற்கான அலை காணப்படுகிறது.

இளைஞர்கள் தற்போது கூறுகிறார்கள் தேசிய மக்கள் சக்தியானது சமத்துவமான ஒரு அரசியலை பேசுகின்றது புதிய ஒரு அரசியல் கலாச்சாரத்தை முன்னெடுக்கின்றது என்று. ஆனால் அந்த சமத்துவ அரசியலிலும் கவலையான விடயம் தமிழ் மக்களை இரண்டாம் தரப்பாக பார்க்கின்ற விடயம் காணப்படுகிறது.

அதிலிருந்து அவர்களிடம் இருந்து மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது. அவர்கள் தமிழருடைய தீர்வு தொடர்பான தெளிவான விடயத்தினை இதுவரையிலும் முன் வைக்கவில்லை. அவர்கள் அதை வெளிப்படையாக கூறுவதற்கு பயப்படுகிறார்கள் என்றார்.

## தமிழ்ப் பிரதிநிதித்துவம்!

ஒரு காலத்தில் பல ஆயுத விடுதலை இயக்கங்கள் தோற்றம் பெற்றன. ஆங்கில எழுத்துகளை முன்னாலும் பின்னாலும் போட்டு விட்டால் அவைகள் எல்லாம் இயக்கங்கள் என்று நகைச்சுவையாகப் பேசுமளவுக்கு இயக்கங்களின் எண்ணிக்கை மேலோங்கியிருந்தது. பின்னர், அனைத்தும் உதிர்ந்து ஐந்து பிரதான இயக்கங்களே நிலை பெற்றன. அவையும் போய் விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே இறுதிவரையில் போராட்டத்தை முன்னெடுத்தது. அதுவும் போனது. இன்று அந்த இடத்தை ஜனநாயகம் பேசும் நபர்கள் கையிலெடுத்திருக்கின்றனர்.

2010இல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே இருந்தது. கூட்டமைப்பிலிருந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆசனப் பங்கீடு தொடர்பான பிரச்சனையில் வெளியேறியது. ஒன்று இரண்டானது. பின்னர் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியேறிது. இடைப்பட்ட காலத்தில் ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி உள்ளுக்குள் இருக்கின்றதா அல்லது வெளியில் இருக்கின்றதா என்பது தெரியாதளவுக்கு நிலைமைகள் இருந்தன. கூட்டமைப்பில் அரசியலை ஆரம்பித்த விக்னேஸ்வரன் பின்னர் ஒரு கட்சியாக முகம் காட்டினார். ரெலோவிலிருந்து சிறீகாந்தா அணியொன்று தெரிந்தது. அனந்தி சசிதரன் இன்னொரு கட்சியென்றார்.

மணிவண்ணனும் இன்னொரு கட்சியென்றார். இது போதாதென்று இப்போது ஜனநாயக தமிழ் அரசுக் கட்சியென்று இன்னோர் அணி உருவாகியிருக்கின்றது. அடுத்த மாகாண சபைக்கு விக்னேஸ்வரனின் பக்கத்திலிருந்தும் இன்னோர் அணி வரலாம். தமிழ் அரசு முற்றிலுமாக சுமந்திரனிடம் சென்றால் சிறீதரனும் இன்னோர் அணியை ஆரம்பிக்கலாம். ஆரம்பகாலத்து இயக்கங்களை நினைவுபடுத்துவது போல் கட்சிகள் உருவாகின்றன. ஆனால், இவ்வாறு தங்களை கட்சியாக்கிக் கொண்டிருப்பவர்களை சற்று உற்றுப் பார்த்தால், அவர்களிடம் ஆகக் குறைந்தது மூன்று பேர் கூட இருக்காது.

மூன்று பேரைக் கொண்டு கட்சி ஆரம்பிக்க முடியுமென்றால் வடக்கு, கிழக்கில் எத்தனை கட்சிகளை உருவாக்க முடியும்? இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் வடக்கு, கிழக்கில் தமிழ் பிரதிநிதித்துவம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் ஆறு ஆசனங்களில் ஒன்றைக் கைப்பற்ற எத்தனை கட்சிகள் போட்டியிடுகின்றன? இவர்கள் சாதிக்கப் போவது என்ன என்பதற்கான பதில் அவர்களிடமாவது இருக்கின்றதா என்பது தான் கேள்வி?

பல இயக்கங்கள் தோன்றி இறுதியில் சிலவாகி, ஒன்றாகி இறுதியில் தமிழ் மக்களுக்கென்று எதுவும் இல்லாது போனது போல், தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் தங்களுக்குள் பிளவுற்று மோதி இறுதியில் தமிழ் மக்களுக்கு எதைப் பெற்றுக் கொடுக்கப் போகின்றன? தமிழ்ப் பிரதிநிதித்துவங்கள் தொடர்ந்தும் பலவீனமடைந்து செல்லும்.

தமிழ்ப் பிரதிநிதித்துவங்களே தமிழ்த் தேசிய அரசியலின் ஒரே பலமாகும். இந்தப் பலத்தையும் இழந்து போனால் தமிழர் அரசியல் என்பது வெறும் சொல்லாகவே மிஞ்சிப் போகும் ஆபத்து நேரிடும். ஆனால், இந்தத் தேர்தல் முடிவுகள் பல கட்சிகளுக்கும் பாடங்களை புகட்டவுள்ளது. வரலாறு முழுவதும் தமிழர் அரசியல் தரப்புகளுக்கு போதிய பாடங்கள் கிடைத்தபோதிலும்கூட எதனையும் கற்றுகொள்ள மாட்டோம் என்பதில் தமிழ்த் தேசியம் பேசும் அரசியல்வாதிகள் உறுதியாக இருக்கின்றனரா?

# தமிழரசுக்கு எதிராக வழக்கு!





இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர், பதில் பொதுச்செயலாளர், நிர்வாகச் செயலாளர் ஆகியோர் அந்த பதவியை வகிக்க இடைக்காலத் தடை விதிக்க வேண்டும், 2024 ஜனவரி மாதத்தின் பின்னர் கட்சியின் மத்திய குழுவின் தீர்மானங்களை சட்ட வலுவற்றதாக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் தமிழரசுக் கட்சியின் ஆயுட்கால உறுப்பினரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் மார்க்கண்டு நடராசா வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

அதில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பதில் பொதுச்செயலாளர் சத்தியலிங்கம், நிர்வாகச் செயலாளர் சேவியர் குலநாயகம் ஆகியோர் எதிராளிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு – கோட்டைக் கல்லாறைச் சேர்ந்த முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மார்க்கண்டு நடராசா என்பவரால் கடந்த 10 ஆம் திகதி இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது. இதன் போது வழக்கைத் தொடர்ந்துள்ள மார்க்கண்டு நடராசா முன் வைத்துள்ள கோரிக்கைகளாவன 1 முதல் 3 வரையான எதிராளிகள் 27.01. 2024 இற்குப் பின்னராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவை கூட்டியமையும் அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாப்புக்கு முரணானவை என்ற வகையில் வெற்றும் வெறிதானவையும் என்ற கட்டளைக்கும் தீர்ப்புக்கும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். மேலும், 1ஆம் மற்றும் 2ஆம் எதிராளிகள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மற்றும் பொதுச்செயலாளர் என்ற அடிப்படையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு என்ற பெயரில் எவ் வித கூட்டங்களையும் கூட்டக் கூடாது என்ற இடைக்காலத் தடை விதிக்குமாறும் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது. அத் துடன், 1ஆம் எதிராளி இலங் கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற கோதாவில் செயற்பட க்கூடாது என்று இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கு மாறும் கோரிக்கை விடுக்கப்பட்டு ள்ளது.

இதேவேளை, 2ஆம் எதிராளி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் என்ற கோதாவில் செயற்படக் கூடாது என்று இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பிக்குமாறும் வழக்காளியின் சார்பில் வேண்டுதல் முன்வைக்கப் பட்டுள்ளது.

சட்டத்தரணி த. தினேஷின் அனுசரணையுடன் சிரேஷ்ட சட்டத் தரணி கலாநிதி குமாரவடிவேல் குருபரன் வழக்காளி சார்பில் தோன்றினார்.

# அரசியல் கோமாளிகளின் கும்மாளத்தினால் பொதுக்கட்டமைப்பு தற்போது இல்லையென மக்களிடம் மன்னிப்புக் கோருகிறார் நிலாந்தன்

மக்கள் நாணயமானவர்களுக்கும், கறைபடியாதவர்களுக்கும் தேச திரட்சிக்காக உழைப்பவர்களுக்கும் மக்கள் வாக்களிக்க வேண்டும் என பொதுக்கட்டமைப்பை சேர்ந்த நிலாந்தன் தெரிவித்துள்ளார்.




யாழ். ஊடக அமையத்தில் 13 ஒக் 2024 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்கள் பொதுச்சபை ஜனாதிபதி தேர்தலை கையாண்ட போன்று, மற்றைய தேர்தல்களை கையாள முடியாததால் நாடாளுமன்ற தேர்தலில் விலகி இருக்கின்றது.

ஜனாதிபதி தேர்தலில் பாவித்த சங்கு சின்னத்தை பாவிக்க வேண்டாம் என கோரினோம். கட்சிகள் விரும்பி இருந்தால் சங்கு சின்னத்தை எடுக்காது இருந்து இருக்கலாம். அதனையும் மீறி எடுத்துள்ளார்கள்.

சங்கு சின்னத்திற்கும், தமிழ் மக்கள் பொதுச்சபைக்கும், பொது கட்டமைப்புக்கும் எந்த தொடர்பும் இல்லை. தமிழ் மக்கள் பேரவையின் கூர்ப்பாகவே தமிழ் மக்கள் பொதுச்சபையாகும். பொதுச் சபை அடுத்த கூர்ப்புக்கு போன பின்னரே தேர்தல்களை எதிர்கொள்ள முடியும்.

தமிழ் மக்கள் பொதுச்சபை ஜனாதிபதி தேர்தலில் தேச திரட்சியை எதிர்பார்த்து அதில் வெற்றியும் பெற்றோம். அது சில நாட்களில் நாடாளுமன்ற தேர்தல் அறிவிப்புடன் மீள சிதறியுள்ளது.

நாடாளுமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் பலம் தமிழ் மக்கள் பொதுச்சபையிடம் இல்லாததால் அதில் இருந்து விலகி இருக்கிறோம்.

எனவே மக்கள் நாணயமானவர்களுக்கும் கறைபடியாதவர்களுக்கும் தேச திரட்சிக்காக மக்கள் வாக்களிக்க வேண்டும். சங்கு சின்னம் புனிதமானது இல்லை. அதற்கு யாரும் உரிமை கோர முடியாது. அது ஒரு பொது நிலைப்பாட்டிற்கான குறியீடு. பொதுக்கட்டமைப்பில் இருந்த பலர் வெளியில் நிற்கும் போது சிலர் மட்டும் அதனை பயன்படுத்துவது அறமில்லை.

சங்கு சின்னத்திற்கு, நாடாளுமன்ற தேர்தலில் சங்கு சின்னத்தில் போட்டியிடுபவர்கள் மட்டும் உழைக்கவில்லை. பலரின் உழைப்பு அதில் உண்டு. தேர்தல் பிரச்சாரத்திற்கு பலர் முன்னரங்கில் வந்து உழைக்காமல் பின்னின்று உழைத்தவர்களும் உண்டு.

தேச திரட்சியை உருவாக்க முயன்று வெற்றி கண்டு சில நாட்களில் அது சிதறுண்டு போயுள்ளது. அதற்காக நாம் மக்களிடம் மன்னிப்பு கோருகிறோம். அத்துடன் பொதுக்கட்டமைப்பு தற்போது இல்லை என தெரிவித்தார்.

## அரசியலில் இருந்து ஒதுங்கிய ராஜபக்ஷ குடும்பம்!

இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷ சகோதரர்களும், நாமல் ராஜபக்ஷவும் போட்டியிடவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இம்முறை தேர்தலில் மொட்டுச் சின்னத்தில் அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிடுகின்ற போதும், அவரோ, அவரின் சகோதரர்கள் உள்ளிட்ட அவரின் குடும்பத்தை சேர்ந்த எவரும் தேர்தலில் போட்டியிடவில்லை.

கடந்த பாராளுமன்றங்களில் மகிந்த ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜபக்ஷ மற்றும் சமல் ராஜபக்ஷ ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர். ஆனால்



கோதாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது 2022இல் இடம்பெற்ற ராஜபக்ஷ எதிர்ப்பு மக்கள் போராட்டங்களால் அவர்களின் அரசியல் செயற்பாடுகள் பின்னடைவு கண்டது. இதேவேளை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ களமிறங்கிய நிலையில், அதில் மிகவும் குறைந்தளவாக வாக்குகளே நாடு முழுவதும் கிடைத்தன. சொந்த மாவட்டத்திலும் நாமல் தோல்வி கண்டார்.

In Person & Online Classes
(In Person Classes are available in Brampton)

Math & Physics Tutoring
(For High School Students)



Math: Grade 9, 10, 11, & 12 (Advanced Functions, Calculus & Vectors and Data Management) Physics: Grade 11 & 12
Special Classes for IB, AP & University Students

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி. இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# தமிழ்மக்களின் மாற்றத்தின் திசை காட்டி தமிழரசுக்கட்சியே! மக்கள் ஓரணிக்கே வாக்களிக்க வேண்டும் - சுமந்திரன் உரை



வடக்கு, கிழக்கு மக்கள் மாற்றத்தை எதிர்பார்த்துள்ள நிலையில் அவர்களுக்கான மாற்றத்தின் திசைகாட்டியாக இருப்பது தமிழ் அரசுக் கட்சியாகும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு வாழ் மக்கள் ஓரணிக்கு திரண்டு தமிழ் அரசுக் கட்சிக்கு வாக்களிப்பதன் ஊடாகவே பேரம்பேசும் சக்தியை வலுப்படுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தமிழ் அரசுக் கட்சி, வடக்கு, கிழக்கு மக்களின் பாரம்பரிய பேராதரவு பெற்ற ஒன்றாகும். அந்த வகையில் அக்கட்சியின் ஆதரவாளர்கள் இம்முறை மாற்றத்தினை எதிர்பார்க்கின்றார்கள்.

வடக்கு, கிழக்கு மக்களின் மாற்றத்தின் திசை காட்டியாக இருப்பது இலங்கைத் தமிழரசுக் கட்சி தான். இதனை தமிழரசுக் கட்சி இம்முறை களமிறக்கியுள்ள வேட்பாளர்கள் மூலமாக உறுதி செய்ய முடியும்.

அந்த வகையில், தமிழ் மக்கள் தங்களுடைய வாக்குகளை ஓரணிக்கே அளிக்க வேண்டும். அதன் மூலமாகவே அவர்களின் பேரம்பேசும் சக்தியை உறுதி செய்துகொள்ள முடியும்.

தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் அபிலாஷைகளை உறுதி செய்வதில் எவ்விதமான மாறுபட்ட கொள்கைகளையும் முன்னெடுக்கவில்லை. ஆகவே புதிய அரசியல் கலாசாரத்தினையும், தனித்துவத்தினையும் உறுதி செய்யும் வகையிலான செயற்பாடுகளை இந்த தேர்தல் களத்தில் காண முடியும் என்றார்.

# வடக்கில் உள்ள அரசியல் கட்சிகள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதற்கு தயார் என்கிறார் ஜனாதிபதி அநுர!



நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் வடக்கில் உள்ள அரசியல் கட்சிகள் தேசியமக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதற்கு தயார் நிலையில் உள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

2024 நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுகின்ற தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களின் ஒன்றுகூடல் 13 ஒக் 2024 இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

இது குறித்து ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது எமது அரசியல் பலம் மிகவும் குறைந்த மட்டத்திலேயே உள்ளது. ஜனாதிபதி தலைமையிலான மூவரை உள்ளடக்கிய அமைச்சரவையே காணப்படுகின்றது.

எந்த விதத்திலும் இது போதுமானதல்ல. தற்போதைய ஜனாதிபதிக்கும் புதிய அமைச்சரவைக்கும் பாரிய பொறுப்பு காணப்படுகின்றது. புதிய அரசியல் கலசாரம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான பொறுப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

அந்த இலக்கினை அடையும் வரை நாம் பல விடயங்களை கடந்து செல்ல வேண்டியுள்ளது. ஒரு சில தீர்மானங்களை எடுக்க நேரிடும். இது எமக்கு சவாலான விடயமாகும். நவம்பர் 14 நாடாளுமன்ற தேர்தல் இடம்பெறவுள்ளது பலமிக்க அதிகாரத்தினை ஏற்படுத்தி கொள்ள வேண்டும்.


நாடாளுமன்றில் பலமிக்க அதிகாரத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் என்ற போதிலும் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைப்பதனால் மாத்திரம் பலமிக்க அதிகாரத்தினை பெறமுடியாது.

தகுதி வாய்ந்தவர்கள் நாடாளுமன்றுக்கு தெரிவு செய்யப்பட வேண்டும்.ஜனநாயக உரிமைகளுக்காக நாடாளுமன்றுக்குள் எதிர்க்கட்சி ஒன்றின் தேவை காணப்படுகின்றது.

நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் வடக்கில் உள்ள அரசியல் கட்சிகள் தேசியமக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதங்கு தயார் நிலையில் உள்ளன. கடந்த காலங்களில் வடக்கு அரசியல் வாதிகள் எம்முடன் கலந்துரையாடியிருந்தனர்.

அதாவது வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்பட தயார் இல்லையெனில் வடக்கு மக்கள் ஜனாதிபதியுடன் இணைவார்கள் என அவர்கள் எம்மிடம் தெரிவித்தனர் எனத் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கர்களைக் கொல்லும் புலம்பெயர்ந்தோருக்கு மரணதண்டனை



அமெரிக்காவில் அமெரிக்கர்களை கொல்லும் புலம்பெயர்ந்தோருக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நவம்பர் 5ஆம் திகதி நடைபெற உள்ளது. குறித்த ஜனநாயக கட்சி வேட்பாளராக தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹாரிசும், குடியரசு கட்சி வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் களமிறங்கியுள்ளனர். தேர்தல் நெருங்கி வரும் நிலையில் இரு வேட்பாளர்களும் தீவிர பிரசாரம் மற்றும் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், கொலராடோ மாகாணம் அரோரா நகரில் நடந்த தேர்தல் பிரசார நிகழ்ச்சியில் குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் கலந்துகொண்டார். இதன்போது உரையாற்றிய டொனால்ட் ட்ரம்ப் சட்டவிரோதமாக நுழைந்த புலம்பெயர்ந்தோரால் அமெரிக்கா தற்போது உலகம் முழுவதும் ஆக்கிரமிக்கப்பட்ட அமெரிக்கா என அழைக்கப்படுவதாகத் தெரிவித்திருந்தார்.

அத்துடன் சட்டவிரோத புலம்பெயர்ந்தோர் மிகவும் ஆபத்தானவர்கள் எனவும், அமெரிக்காவில் அமெரிக்கர்கள், பாதுகாப்புப்படையினர், பொலிஸாரை கொலை செய்யும் புலம்பெயர்ந்தோருக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# சங்கு சின்னமும் அரசியலில் அறமும்!

சங்கு சின்னத்தை முன்வைத்து பொதுச் சபையினர் ஆங்காங்கே அறம் பற்றி பேச முற்படுவதாகத் தெரிகின்றது. அவர்கள் அவ்வாறு பேசுவது சரியானதா அதற்கான தார்மீக தகுதி அவர்களுக்கு உண்டா? சங்கு சின்னத்தை ஒரு தேர்தல் தந்திரமாகவே ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர் எடுத்திருக்கின்றனர். தேர்தல் என்றால் ஒவ்வொரு கட்சியும் தங்களது வெற்றி பற்றியே சிந்திக்கும். இதில், ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. சங்கு சின்னத்தை எடுத்திருக்கும் அரசியல் கட்சிகள் தங்களின் நியாயத்தை கூறுகின்றனர்.

குறிப்பாக பொதுச் சபையின் சார்பில் பங்குகொண்டவர்கள் ஒற்றைச் சொல்லில் அதனை எடுக்க வேண்டாம் கை விடுங்கள் என்று அழுத்தமாகக் கூறவில்லை என்கின்றனர்.

மறுபுறம் பொதுச் சபையின் சார்பில் பொதுவெளிகளில் பேசுகின்றவர்களில் சிலர் தாங்கள் அவ்வாறு கூறவில்லை என்கின்றனர். இதில் எவர் கூறுவது சரி எவர் கூறுவது தவறு என்பதற்கு அப்பால் சங்கு சின்னத்தை பொதுக் கட்டமைப்பிலுள்ள கட்சியொன்று எடுத்ததை அறம் சார்ந்து விவாதிக்க முடியுமா? முதலாவது விடயம், பொதுச் சபைக்கும் ஏழு அரசியல் கட்சிகளுக்கும் இடையிலான உடன்பாட்டில் பொது வேட்பாளராக நிறுத்தப்படும் குறிப்பிட்ட நபருடன் பொருத்தமான உடன்பாடு செய்யப்படுமென்று குறிப்பிடப் பட்டிருக்கின்றது.

அந்த உடன்பாடு எங்கே? இதற்கு பொதுச் சபையினரால் பதிலளிக்க முடியாது. ஏனெனில், அவ்வாறானதோர் உடன்பாடு செய்யப்படவில்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் பொதுச் சபையின் உடன்பாட்டை பொதுச் சபையே முறையாகக் கைக்கொள்ளவில்லை.

பொது வேட்பாளராக நிறுத்தப்பட்ட பா. அரியநேத்திரன் இப்போது, கொள்கைரீதியாக பொது வேட்பாளரை எதிர்ப்பதாகவும் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதே சரியென்று முடிவெடுத்த தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு வேட்பாளருக்கு ஆதரவாக பிரசாரம் செய்யப் போவதாக அறிவித்திருக்கின்றார். அறம் பற்றிப் பேசுவதாயின், அரியநேத்திரனின் தீர்மானம் அறம் சார்ந்ததா? எந்தக் கட்சிகள் அவருடன் பொது வேட்பாளர் விடயத்தில் உடன்பட்டு கைகோத்து பயணித்தனவோ அவர்களுக்கு எதிராகவே அரியநேத்திரன் பிரசாரம் செய்யப்போகின்றார்.

மட்டக்களப்பில் சங்கு சின்னத்தில் ஓர் அணியும் வீட்டுச் சின்னத்தில் இன்னொரு தரப்பும் மோதவுள்ள நிலையில், சங்குக்கு சங்கு ஊதப் போவதாக சூளுரைத்து அரியநேத்திரனுக்கு எதிராக பிரசாரங்களை முன்னெடுத்த சாணக்கியன் அணிக்கு ஆதரவாகவே அரியநேத்திரன் பிரசாரங்களை செய்யவுள்ளார். இந்த விடயத்தில் அறம் சார்ந்து அரியநேத்திரனை பொதுச் சபையால் கட்டுப்படுத்த முடியுமா? அது முடியாது என்றால் மற்றவர்களின் அறம் பற்றிப் பேசுவதற்கு பொதுச் சபைக்கு என்ன தகுதியுண்டு? அவர் தனிப்பட்ட காரணங்களை கூறினாலும் இறுதியில் அவர் சாணக்கியன் அணியை பலப்படுத்தும் பணியையே செய்யப் போகின்றார்.

இந்தப் பின்புலத்தில் சங்குச் சின்னம் தொடர்பில் அறம் பற்றிப் பேசும் தகுதிநிலையை பொதுச் சபை முற்றிலும் இழந்துவிட்டது. பொதுச் சபையின் தவறு எங்கு ஆரம்பிக்கின்றது என்றால், பொதுச் சபை அரசியலை கையாளுவது தொடர்பில் அரைகுறையான பார்வையையே கொண்டிருந்திருக்கின்றது. மேலும் விடயங்களின் பக்க விளைவுகளை ஆராயாமல் சிறுபிள்ளைத்தனமாக முடிவெடுத்திருக்கின்றது.

பொதுச் சபையை வழி நடத்தியவர்களில் சிலர் கருத்துருவாக்கிகள் புத்திஜீவிகளாக தங்களை அடையாளப்படுத்தியிருந்த போதிலும் கூட, ஒரு தீர்மானத்தை மேற் கொள்ளும் போது அதன் பக்கவிளைவுகள் குறித்துத் தெளிவாக ஆராய்ந்தே தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். இந்த விடயத்தில் பொதுச் சபையின் அணுகுமுறை சிறுபிள்ளை வேளாண்மை போன்றே காணப்படுகின்றது. தூர நோக்கின்றி முன்னெடுக்கப்படும் பக்க விளைவுகளை ஆராயாமல் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் அனைத்தும் இப்படித்தான் முடிவுறும்.

அரசியலை கையாளும் விடயத்தில் பொதுச் சபை தோல்வியடைந்து விட்டது என்பதே உண்மை.

# பொறுப்புக் கூறலுக்கு உள்நாட்டு பொறிமுறை - உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நிதிக் குற்றங்கள் குறித்து ஆராய புதிய குழுக்கள்? அரசாங்கம் திட்டம்!



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நல்லிணக்க செயற்பாடுகள் நிதி குற்றங்கள் குறித்து ஆராய்வதற்காக அரசாங்கம் மூன்று உயர்மட்ட குழுக்களை நியமிக்கவுள்ளது. பொதுத்தேர்தலிற்கு முன்னதாக இந்த குழுக்களை அரசாங்கம் நியமிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒழுக்காற்று அடிப்படையிலான ஆட்சி ஊழல் வீண்விரயம் போன்றவற்றிற்கு தீர்வை காணுதல் போன்ற ஜனாதிபதியின் தேர்தல்கால வாக்குறுதிகளை அடிப்படையாக கொண்டு இந்த குழுக்களை அரசாங்கம் நியமிக்கவுள்ளதாக அரசாங்க வட்டார தகவல்கள் தெரிவித்துள்ளன.

உள்நாட்டு பொறிமுறை மூலமே பொறுப்புக்கூறலிற்கு தீர்வு காணப்படும் என தெரிவித்துள்ள அந்த வட்டாரங்கள் பொறுப்புக்கூறல் நல்லிணக்க விடயத்திற்கு தீர்வை காணக்கூடிய திறமையான நபர்கள் எங்களிடம் உள்ளனர் என அரசவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாதிக்கப்பட்டுள்ள பெருமளவு மக்களின் துயரங்கள் குறித்து நாங்கள் அறிவோம்.நாங்கள் அவர்களிற்கு நீதியை வழங்குவோம் என தெரிவித்துள்ள அரசாங்க வட்டாரங்கள் நம்பகத்தன்மை மிக்க உண்மை மற்றும் நல்லிணக்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளன.

இன்னமும் தீர்வு காணப்படாமல் உள்ள பொறுப்புக்கூறல் சம்பவங்களின் எண்ணிக்கையை அறிவதற்கான நடவடிக்கைகளை விசாரணை அதிகாரிகள் துரிதப்படுத்தியுள்ளனர் எனவும் அவை தெரிவித்துள்ளன.

இதேவேளை குழுவொன்று ஊழல் களவாடப்பட்ட சொத்துக்கள் குறித்து இழக்கப்பட்ட பொதுமக்களின் வரிப்பணத்தை மீட்பதற்கான பரிந்துரைகளை முன் வைக்கும் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து புதிய கோணத்தில் ஆராய்வதற்கான குழுவொன்று நியமிக்கப்படும், இதற்காக விசேட குழுவை தெரிவு செய்துள்ளோம், பாதிக்கப்பட்டவர்களிற்கு நீதி வழங்கப்படும் என இந்த விடயங்கள் குறித்து நன்கறிந்த ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராம் படுகொலை, காணாமல் போன லலித் குகன் உட்பட முக்கிய ஏழு சம்பவங்கள் குறித்து விசாரணைகளை துரிதப்படுத்துமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல், மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்த விசாரணைகளையும் தீவிரப்படுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் சிஐடியினருடனும் உரிய பொலிஸாருடனும் இணைந்து செயற்படுமாறு பொது மக்கள் பாதுகாப்பு தரப்பு பதில் பொலிஸ்மா அதிபரை கேட்டுக் கொண் டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரி வித்துள்ளார்.

அத்துடன் இலங்கையின் பிரபல வர்த்தகர் தினேஸ் ஸ்காப்டரின் மரணம் வெலிகமவில் டபிள்யூ 15 ஹோட்டலிற்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொல்லப்பட்டமை குறித்தும் விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

## தமிழரசுக்கட்சியின் யாழ்.தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக நிகழ்வு

தமிழரசுக் கட்சியின் யாழ் தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக நிகழ்வு 13 ஒக்டோபர் 2024 நடைபெற்றது. அதில் ஆயிரக்கணக்கில் திரண்டனர் மக்கள் இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்ற கோஷங்கள் வானைப் பிளந்தன. இது பற்றிய செய்தி வருமாறு

யாழில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட் பாளர் அறிமுக நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறித்த நிகழ்வானது யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா மண்டபத்தில் 13 ஒக் 2024 மாலை இடம்பெற்றுள்ளது.

தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் மற்றும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் இந் நிகழ்வு இடம் பெற்றுள்ளது. இதன்போது வேட்பாளர்கள் அழைத்து வரப் பட்டு மங்கள விளக்கேற்றலுடன் வேட்பாளர் அறிமுக நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேலும் இந்நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் வேட்பாளர்கள் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் பொது மக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டமை ஏனைய கட்சி வேட்பாளர்களை நிலை குலையச் செய்துள்ளது.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# அனுர அரசாங்கமும் பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்துகின்றது என்கிறார் சமூக செயற்பாட்டாளர் ரஜீவ்காந்

அனுரகுமார திசநாயக்க அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துகின்றது பொது வேட்பாளருக்கு சார்பாக செயற்பட்ட ஒருவருக்கு விசாரணைக்கு சமூகமளிக்குமாறு பயங்கரவாத விசாரணை பிரிவினர் உத்தரவு பிறப்பித்துள்ளனர் என மக்கள் போராட்ட முன்னணியின் உறுப்பினரும் சமூக செயற்பாட்டளருமான ராஜ்குமார் ரஜீவ்காந் தெரிவித்துள்ளார்

செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது – இந்த ஆட்சியில் இருக்கக்கூடிய அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவோம் என உறுதியளித்திருந்தது.

இன்று இவர்கள் ஆட்சிக்கு வந்து சில நாட்களே ஆகியுள்ள நிலையில் இன்று சிலருக்கு பயங்கரவாத தடுப்பு பிரிவிலிருந்து கடிதங்கள் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

நண்பர் ஒருவர் இந்த முறை தமிழ் பொதுவேட்பாளராக களமிறங்கிய அரியநேந்திரனிற்கு சமூக வலைத்தளத்தில் பணம் செலுத்தி விளம்பரங்கள் செய்து கொண்டிருந்தவர். அவ்வாறு பணம் செலுத்தி விளம்பரம் செய்யப்பட்டது ஒரு தீவிரவாத குற்றம் என வரையறை செய்வது போல தீவிரவாத தடுப்பு பிரிவினர் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் அவருக்கு கடிதம் அனுப்பி முறைப்பாடு விசாரணையொன்றிற்கு அழைத்துள்ளனர்.

இந்த விசாரணை தொடர்ச்சியாக இரண்டு நாட்கள் இடம் பெற்றிருக்கின்றது. சர்வதேசத்திலிருந்து எப்படி பணம் யாரிடமிருந்து வந்தது போன்ற கேள்விகளை கேட்டுள்ளனர்.

அனுர குமாரதிசநாயக்கவிற்கு கூட பல்வேறு நாடுகளில் இருந்து பணம் வருகின்றது. வந்திருக்கின்றது இவற்றையெல்லாம் இவர்கள் என்ன கோணத்தில் விசாரணை செய்யப்போகின்றார்கள்

குறிப்பாக தமிழ் மக்கள் மேல் தமிழ் மக்கள் சார்ந்த அரசியல் மேல் பயங்கரவாதம் என்ற குற்றச்சாட்டும் பயங்கரவாதம் என்ற முத்திரையும் குத்தப்படுவது அவர்கள் தங்கள் எதிர்கால அரசியலை எந்தவகையிலும் முன்னெடுக்க முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தும் என்பதை இவர்கள் முதலில் புரிந்துகொள்ளவேண்டும்.

இளைஞர்கள் இந்த அரசியலிற்கு வருவதற்கு அரசியல் பேசுவதற்கு தங்களிற்கு எதிராக நிகழ்ந்து கொண்டிருக்கின்ற அடக்குமுறைக்கு எதிராக குரல் கொடுப்பதற்கு தயங்குவதற்கான ஒரு பிரதான காரணமாக பயங்கரவாத தடைட்டச்சட்டம் காணப்படுகின்றது. எனவே இந்த பயங்கரவாத தடைச் சட்டம் என்ற ஒன்றை வைத்துக் கொண்டு பயங்கரவாத தடுப்பு பிரிவு எங்களின் மேல் தொடர்ச்சியான அடக்குமுறைகளை பிரயோகிப்பது, கட்டவிழ்த்து விடுவது எந்த வகையில் நியாயம் என நான் இந்த அரசாங்கத்திடம் கேள்வி எழுப்புகின்றேன்.



இதேவேளை கிளிநொச்சியில் ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டிற்கு சென்ற பயங்கரவாத தடுப்பு பிரிவினர் அவரின் பெற்றோரிடம் விபரங்களை பெற்றுள்ளனர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். தமிழ் மக்களிற்கு ஆதரவாக செயற்படுகின்றீர்கள் அதனால், உங்களை விசாரணை செய்கின்றோம் என்ற வகையில் அவருக்கு ஒரு அழைப்பும் சென்றிருக்கின்றது .இந்த அழைப்பின் ஒலிவடிவம் என்னிடம் உள்ளது.

இதேபோல அம்பாறை மாவட்ட காணாமல் போனோர் உறவினர்களுடைய அந்த போராட்டத்திற்கு தலைமை தாங்குகின்ற செல்வராணி என்ற பெண்மணியை இரண்டு மூன்று நாட்களிற்கு முன்னர் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

# மீண்டும் வலுக்கும் கனடா - இந்தியா பிரச்சனை! இந்தியா எடுத்த அதிரடி முடிவு என்ன?

இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையே இருந்த ராஜதந்திரச் சிக்கல் மீண்டும் தலைதூக்கியுள்ளது. இம்முறை இன்னும் வலுவாக.

2023ஆம் ஆண்டு ஜீன் மாதம் நடந்த, காலிஸ்தானுக்கு ஆதரவான ஆர்வலர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை வழக்கில் கனடாவுக்கான இந்திய தூதரக உயர் அதிகாரியான சஞ்சய் குமார் வர்மா மற்றும் பிற இந்திய தூதரக அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதாக கனடா குற்றம் சாட்டியது.

கனடாவின் இந்த குற்றச்சாட்டுகள் அபத்தமானது என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பல சவால்களை எதிர் கொள்வதால் இந்த விவகாரம் இப்போது அரசியல் ரீதியாக இணைக்கப்பட்டுள்ளது என்று இந்தியா கூறியுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை அக்டோபர் 13ஈ 2024 அன்று கனடா தூதரகத்தில் இருந்து தகவல் ஒன்று வந்தது. கனடாவில் நடைபெற்று வரும் விசாரணையில் இந்தியாவின் தூதரக உயர் அதிகாரி மற்றும் பிற இந்திய தூதரக அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளது என்று அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது. இந்த அபத்தமான குற்றச்சாட்டுகளை இந்திய அரசு திட்டவட்டமாக மறுக்கிறது. கனடாவில் ட்ரூடோ அரசாங்கம் மக்கள் வாக்குகளைப் பெறுவதற்காக இதைச் செய்கிறது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

இந்நிலையில், இந்தியா தனது தூதரக உயர் அதிகாரியான சஞ்சய் குமார் வர்மா மற்றும் கனடாவில் உள்ள பிற தூதரக அதிகாரிகளைத் திரும்பப் பெற முடிவு செய்துள்ளது. மேலும், இது குறித்து கனடா தூதரக ஆணையத்திற்கு இந்தியா சம்மன் அனுப்பியுள்ளது.

14 ஒக்டோபர் 2024 திங்கட்கிழமை அன்று கனடாவின் ராஜ்ஜிய தொடர்பை நிராகரித்தது. இந்தியா மிகவும் வலுவான பதிலை அளித்துள்ளது. இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் கனடாவில் உள்ள இந்தியாவின் தூதரக உயர் அதிகாரியான சஞ்சய் குமார் வர்மாவை ஆதரித்து, 'வர்மா ஒரு மூத்த தூதரக அதிகாரி. அவர் 36 ஆண்டுகளாக தூதரக பணியில் உள்ளார். ஜப்பான் மற்றும் சூடான் ஆகிய நாடுகளில் இந்தியத் தூதரக அதிகாரியாகப் பணி புரிந்துள்ளார். மேலும் அவர் இத்தாலி, துருக்கி, வியட்நாம், மற்றும் சீனாவிலும் பணியாற்றியுள்ளார். அவர் மீது இது போன்ற குற்றச்சாட்டை சுமத்துவது அபத்தமானது மற்றும் அவரை அவமதிப்பதற்கு சமம் என்று தெரிவித்தது.

2023–ஆம் ஆண்டு, ஜீன் 18–ஆம் தேதி அன்று, காலிஸ்தான் ஆதரவாளர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் அடையாளம் தெரியாத நபர்களால் படுகொலை செய்யப்பட்டார். கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம், புதுடெல்லியில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன்பு, நிஜ்ஜாரின் கொலையில் இந்தியத் தூதரக அதிகாரிகளுக்குத் தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர் ட்ரூடோ நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இந்தியாவின் தூதரக உயர் அதிகாரியை அவர் பணி நீக்கம் செய்தார். இதற்குப் பதிலடியாக, கனடாவின் தூதரக உயர் அதிகாரியை ஐந்து நாட்களுக்குள் நாட்டை விட்டு வெளியேறுமாறு இந்தியா கூறியது.

கனடா குடிமக்களுக்கு விசா வழங்குவதையும் இந்தியா நிறுத்தியது. இந்தியாவில், 41 தூதரக அதிகாரிகள் கனடாவின் தூதரகத்தை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. 2023–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை கனடாவில் இருந்து வருபவர்களுக்கு விசா வழங்குவதை இந்தியா நிறுத்தியது.

நிஜ்ஜார் கொலை வழக்கில் கனடா குற்றச்சாட்டுகளை மட்டுமே முன் வைக்கின்றது, அதற்கான உரிய ஆதாரங்களை எதுவும் வழங்கவில்லை என்று இந்தியா இது குறித்து ஆரம்பத்தில் இருந்தே கூறி வருகிறது. கனடாவின் விசாரணையை ஒரு சாக்குப்போக்கு என்றும் அரசியல் பலங்களுக்காக கனடா அரசாங்கம் வேண்டுமென்றே இந்தியாவைக் குற்றம் சாட்டுகிறது என்றும் இந்தியா தெரிவித்தது.




இந்நிலையில், கனடாவில் இருந்து, இந்த விஷயத்தில் 'இலக்கு வைக்கப்பட்ட' இந்திய தூதரக உயர் அதிகாரி மற்றும் பிற தூதரக அதிகாரிகளைத் திரும்பப் பெற இந்திய அரசு முடிவு செய்துள்ளது என்று ஏ.என்.ஐ செய்தி முகமை தெரிவித்துள்ளது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் அறிக்கையை மேற்கோள் காட்டி, எக்ஸ் சமூக வலைதளத்தில் பதிவிட்டுருக்கும் ஏ.என்.ஐ செய்தி முகமை, அந்த அறிக்கையில் 'தீவிரவாதம் மற்றும் வன்முறைச் சூழலில், ட்ரூடோ அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அவர்களின் பாதுகாப்பை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளன என்பது அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டது' என்று கூறப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறது.

அவர்களது பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தற்போதைய கனடா அரசாங்கத்தின் உறுதிப்பாட்டில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. எனவே, இந்திய அரசு 'இலக்கு வைக்கப்பட்ட' தூதரக உயர் அதிகாரி மற்றும் பிற தூதரக அதிகாரிகளை திரும்பப் பெற முடிவு செய்துள்ளது.' என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் அறிக்கை சொல்வதாக ஏ.என்.ஐ–இன் பதிவு சொல்கிறது.

கனடாவில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் மற்றும் சமூகத் தலைவர்களை அச்சுறுத்தும் தீவிரவாதிகள் மற்றும் பயங்கரவாதிகளுக்கு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அடைக்கலம் அளித்து வருகிறார். கருத்து சுதந்திரம் என்ற பெயரில் கனடா அரசு இதை அனுமதிக்கிறது என்று இந்திய அரசு கூறியது.

சட்டவிரோதமாக கனடாவுக்குள் நுழைந்த சில நபர்களுக்கு குடியுரிமை வழங்குவதில் தாமதம் இல்லை. கனடாவில் வாழும் பயங்கரவாதிகளை, இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கையை கனடா பல முறை நிராகரித்து உள்ளது என்றும் இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்தியாவுடன் பகைமை பாராட்டுவதை குறிக்கும் பல ஆதாரங்கள் உள்ளன. 2018–ஆம் ஆண்டு அவர் இந்தியா வந்தபோது அவரது வாக்கு வங்கியை வளர்ப்பதே அவரது நோக்கமாக இருந்தது. அவரது அமைச்சரவையில் இந்தியாவை தீவிரவாத மற்றும் பிரிவினைவாதக் கருத்துக்களுடன் தொடர்புபடுத்தும் நபர்கள் இடம் பெற்றுள்ளனர். ட்ரூடோவின் அரசாங்கம் (22ம் பக்கம் பார்க்க)

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஒக்டோபர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**

**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**

**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**

**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**

**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**

**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**

**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**

**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.


எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

11 2024 - 18 ஒக்டோபர் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பையா நடராஜா

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பையா நடராஜா அவர்களின் 12வது ஆண்டு நினைவு நாள் 29 செப்டம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தம்பையா நடராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இரகுநாதர் மயில்வாகனம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு மயில்வாகனம் இரகுநாதர் அவர்களது ஒன்பதாவது ஆண்டு நினைவு நாள் 12 ஒக்டோபர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு மயில்வாகனம் இரகுநாதர் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 24வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு மயில்வாகனம் நிமலராஜன்

எழுத்து, பேச்சு, ஊடகம் ஆகியவற்றின் உரிமைக்காக உயிர் பறிக்கப்பட்ட உண்மையாளன் - ஊடகவியலாளர் திரு மயில்வாகனம் நிமலராஜன் அவர்களது 24வது ஆண்டு நினைவு நாள் 19 ஒக்டோபர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு மயில்வாகனம் நிமலராஜன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகள் ஈழநாடு பத்திரிகை வாசகர்கள் அனைவரும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு வாசுதேவன் துரைராஜா

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு வாசுதேவன் துரைராஜா அவர்களின் 31ம்நாள் நினைவு நாள் 08 ஒக்டோபர் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது நினைவாக கனடாவில் வாழும் திரு சுதாகர் குடும்பமும் திரு சாந்தகுமார் குடும்பமும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு வாசுதேவன் துரைராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அனைவருடனும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு பத்மநாதன் கனகராஜா

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு பத்மநாதன் கனகராஜா அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவு நாள் 05 ஒக்டோபர் 2024 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள்.. திரு பத்மநாதன் கனகராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவுகள்






### திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா

அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களது சிரார்த்த தினம் 29 நவம்பர் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள்.. திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



29 செப்டம்பர் 2024 ஞாயிற்றுக்கிழமை கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பையா நடராஜா அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் சார்பாக திருமதி கனகம்மா அவர்கள் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



11 ஒக்டோபர் 2024 வெள்ளிக்கிழமை விஜயதசமி பூஜை உபயமாக கனடாவில் வாழும் செல்வி ஜெகரின்யா மங்களமூர்த்தி அவர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



12 ஒக்டோபர் 2024 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி ஜெயராணி சாந்தகுமார் அவர்களது பிறந்த நன்னாளாகும். அன்றையதினம் திருமதி ஜெயராணி சாந்தகுமார் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



12 ஒக்டோபர் 2024 சனிக்கிழமை புரட்டாதிக் கடைசிச்சனி விரத உபயமாக கனடாவில் வாழும் செல்வி ஜெகரின்யா மங்களமூர்த்தி அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்.



12 ஒக்டோபர் 2024 சனிக்கிழமை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரகுநாதர் மயில்வாகனம் அவர்களது 9வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



17 ஒக்டோபர் 2024 வியாழக்கிழமை கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு அன்னலிங்கம் சந்திரசேகரம்பிள்ளை அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




CANADA TAMILOSAI
Vijaya Jewellery
VIBRANT HOSPITALITY GROUP
இணைந்து வழங்கும்
AN EVENT BY
தீபாவளியை திருநாளை கொண்டாடிட
பிரம்மாண்டமான
இசை நிகழ்ச்சி
கனடா மற்றும் தென்இந்திய
கலைஞர்களின் பங்களிப்பில்
DANCE GROUP
PRIMA DANCE SCHOOL EST. 2011
OCTOBER 26 SATURDAY 2024
சுகமான ராகங்கள்
LIVE MUSIC
MUSIC GROUP
EVENTS START
AT 4:30 PM
Kalyan's Golden Rhythms
FOLLOW US ON
CANADA EVENT CENTRE
300 Water St, Whitby, ON L1N 9B6, Canada
TICKETS
$30, $50, VIP, VVIP
FOR MORE DETAILS 416.625.5010
www.eventbrite.ca
SILVER SPONSORS
BROWNS SPONSORS
EVENT SPONSORS
EVENT SPONSORS

கலாபூஷணம் சோக்கல்லோ
சண்முகம்அரங்கு

yugam radio
yugam TV

CTAA
CANADIAN TAMIL ARTISTS' ASSOCIATION

கலைவேந்தன்
கணபதி ரவீந்திரன்

நவரசத்தாரகை
ரூபி யோகதாசன்

கனடிய தமிழ் கலைஞர்கள் சங்கம்
யுகம் வானொலி, யுகம் தொலைக்காட்சி இணைந்து
பெருமையுடன் வழங்கும்

# 20வது ஆண்டு நாடகப் பெருவிழா 2024

சிரிக்க ! சிந்திக்க!! சிந்தனைக்கு விருந்தளிக்க!!!
ஒரே மேடையில் ஐந்து நாடகங்கள்.

நிகழ்ச்சி தொகுப்பாளர்
S.J. பிரசாந்

SATURDAY OCT 19 @4:30PM

**Toronto Pavilion**
190 Railside Rd,
North York, ON M3A 1A3

TICKETS: $20

Ravi 416-898 7284 / Ruby 416-670-6522

## நாடக அனுசரணை வழங்குவோர்கள்

| முற்பகல் செய்யில் | தவிப்பு | சகுனியின் சபதம் | தில்லாலங்கடி | சிதம்பர சக்கரம் |
|---|---|---|---|---|
| K T GROUP, PRESIDENT & CEO MR. KANA SELVA 647302 1189 | CORNWALL SHIVAN TEMPLE - CANADA, 1730 VINCENT MASSEY DRIVE, CORNWALL, ON K6H 5R6, Tel : +1 416-939-4921, cornwallshivantemple@gmail.com, Web : www.cornwallshivan.ca | அகஷியா நகைமாளிகை, 3351 Markham Rd, Red Building Scarborough, ON M1X 0A6 | Vijaya Jewellery | JEYA JEYAKANTHAN, TRUST INTEGRITY EXPERIENCE, 647 309 3091 |


100 பவுண் நகை பரிசு 647-702-2159

LISTO Aravinth Ratnasingam 416 668 1234

CanMore Personal Solutions 437-972-7930 437-522-1990

647-996-5922 Auspicious Latha Gold House 35 Karachi Dr

NEW PREMIUM STONE LTD Quartz, Granite, Countertop 416.858.1290 100 Melford Dr, Unit #1, Scarborough, ON M1B 2G4

HomeLife Selva Vettyvel 416.568.4301 Rishani Vettyvel 416.261.1544 Vettyvel.Law

Visit our website for a FREE Home Valuation Shan Thayaparan 416-567-7675

TOP PRODUCER FOR LAST 5 YEARS 2019 2020 2021 2022 2023 Abi Amalan 416.732.1810 Amal Ganeshamoorthy 416.829.9993

Royal Fashions Tel : 416.519.1119 Cell : 416.358.5478

YOUR INTEREST IS MY CAPITAL Sri Sivasubramaniam CELL: 416-884-3991

TIMES IRON WORKS INC

கனகாம்பிகை அடகுமையம் 416-269-7198

RAGI KUMAR EAST-WEST Accounting Consultants 289-660-7500

Queens Palace Banquet Hall Vassant Deepa

WAF HELPING HANDS OUTLET World Action Foundation

Chapel Ridge Funeral Home & Cremation Centre Christeen Seevaratnam 416-258-6759

Finch Warden Medical Clinic 3430 Finch Avenue East Scarborough

THAMIZHA (416) 878-5454 2900 Markham Rd Unit - D2, Scarborough

தமிழரின் நிர்வாகத்தில் Royal King 416.706.0004

LOTUS Funeral and Cremation Centre Inc. 416-834 5753 Patricia Peter

LAND KING JEGAN Specialized in Development Land Sales 416 666 9777

JRB universal inc R.R.Rajkumar 647-289-6164

ALOE FRESH BEAUTY SPA 100 % Natural Mrs. Vasanthi Ramasamy 647-787-1398 www.vashasproduct.ca

OPTIMART

FINANCIAL SOLUTIONS AUTO • HOME • LIFE

DEVADAS LAW Vina Devadas 416.266.1234 1415 Kennedy Road, Unit 3, Toronto, Ontario, M1P 2L6

Mohan Remisiar 416.528.0372 RE/MAX

RUBY AND RUBY SAREE PALACE

INCOME TAX SERVICE Thanam Kanagaratnam Tax Analyst

Stork Traders

## Skandavarodaya Old Students' Association-Canada
## ஸ்கந்தவரோதயா பழையமாணவர் சங்கம் - கனடா

**SKANDA NITE** 34th ANNIVERSARY 1991- 2024

SATURDAY, OCTOBER 19TH 2024 AT 6 PM

Kennedy Convention Centre
1199 Kennedy Road, Scarborough M1P 2L2



Lathan Brothers Music Group

Please join us on this evening for dinner and entertainment.

Nada:416-616-8751 Judita:416-402-4495 Jeyadevi:647-454-9617



## கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 - Tel : 416-321-6104

## ANNUAL GENERAL MEETING / ELECTION 2024

TO ALL ACTIVE MEMBERS OF SRI AYYAPPA SAMAJAM OF ONTARIO

The 29th Annual General Meeting (AGM) of Sri Ayyappa Samajam of Ontario will be held on Saturday October 19, 2024 from 10:00am to 1:00pm.
The venue for the meeting will be
635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8.
Election for 3 (Three) new Board of Directors for 2024 will be held on Saturday, October 26, 2024, between 10 Am to 2 PM at Canada Sri Ayyappan Temple, Hall 2.
Nomination kit can be collected from the office from October 1, 2024 and submit the completed kit latest by October 10, 2024 by 12.00 noon.

For further details, please contact the temple - 416-321-6104 / 416-321-7558 - *Board of Directors*

## வருடாந்த பொதுக்கூட்டம் / தேர்தல் 2024

அன்புடையீர்!

ஸ்ரீ ஐயப்ப சமாஜம் ஒப் ஒன்ராறியோவின் 29வது ஆண்டிற்கான வருடாந்த பொதுக்கூட்டம் 19-10-2024 சனிக்கிழமை காலை 10.00 முதல் பகல் 1:00 மணிவரை ஆலய கலாச்சார மண்டபத்தில் இடம்பெறும்.
2024ஆம் ஆண்டுக்கான மூன்று (3) நிர்வாக அங்கத்தவர்களுக்கான தெரிவு (தேர்தல்), 26-10-2024 சனிக்கிழமை காலை 10:00 மணி முதல், பகல் 2:00 மணிவரை ஐயப்பன் ஆலய கலாச்சார மண்டபம் - 2 இல் இடம்பெறும்.
முக்கிய குறிப்பு: விண்ணப்ப பத்திரம் ஒக்டோபர் 1, 2024 முதல் ஆலய காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்,
முடிவு தேதி அக்டோபர் 10, 2024 நண்பகல் 12:00 மணி.

மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்புகொள்ளவும். *அறங்காவலர் சபையினர்* : 416.321.6104, 416.321.7558

# சிங்கங்களும் பன்றிகளும் அறுவான்களும் குறுக்கால போவான்களும்?

கடந்த 15 ஆண்டுகளில் எல்லா ஜனாதிபதித் தேர்தல்களின் போதும் தமிழ் மக்கள் யாரைத் தோற்கடிக்க வேண்டும் என்று தீர்மானித்து.திரண்டு வாக்களித்தார்கள். அங்கே ஒரு திரட்சி இருந்தது.

அதேசமயம் ஏனைய தேர்தல்களில் குறிப்பாக, நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் மக்களைத் திரட்ட முடியவில்லை. தமிழ் மக்கள் சிதறி வாக்களித்தார்கள். இம்முறை தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் உடைவானது அந்தச் சிதறலை மேலும் அதிகப்படுத்துமா?

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்திய பொழுது தேசமாகத் திரள்வோம் என்று கூறப்பட்டது. ஆனால் நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் கட்சிகளாகச் சிதறுவோம் அல்லது குழுக்களாகச் சிதறுவோம் அல்லது கட்சிக்குள் அணிகளாகச் சிதறுவோம் அல்லது சுயேச்சைகளாகச் சிதறுவோம் என்ற கோஷத்தை முன்வைக்க வேண்டி வருமா?

நடப்பு நிலைமைகளைத் தொகுத்துப் பார்த்தால் தமிழ்த்தேசிய அரசியல் களம் அப்படித்தான் காட்சி தருகின்றது. தேசியவாத அரசியல் என்பது மக்களைத் திரளாகக் கூட்டிக்கட்டுவது. மக்களை கூட்டுணர்வின் அடிப்படையில் ஒரு தேசமாகத் திரட்டுவது. ஆனால் கட்சிகள் மத்தியில் கூட்டுணர்வு இருந்தால் தான் அவை மக்களைக் கூட்டிக் கட்ட முடியும்.கட்சிகள் மத்தியில் அது இல்லையென்றால் எப்படி மக்களைத் தேசமாகத் திரட்டுவது?

உள்ளதில் பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சி ஒரு தனிநபரின் கருவியாக மாறி அந்தத் தனிநபரை வெல்ல வைப்பதற்காக அவருடைய விசுவாசிகளை வேட்பாளர் பட்டியலில் சேர்த்திருக்கின்றது. அந்த விசுவாசிகள் தமக்கு விசுவாசமான தலைவருக்காக வாக்குகளை சேகரித்துக் கொடுப்பார்கள். ஒரு மூத்த கட்சியானது வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பொழுது என்னென்ன அளவு கோல்களை வைத்து அதைச் செய்திருக்க வேண்டும் ?

ஆனால் அதைக் கேள்வி கேட்க வேண்டிய மூத்தவர்களும் இந்த ஆண்டின் தொடக்கத்தில் கட்சிக்குள் தலைவராக தெரிவு செய்யப்பட்ட சிறீதரனும் என்ன செய்கிறார்கள்? சிறீதரனுடைய ஆதரவாளர்கள் ரஜினிகாந்தின் படத்தில் வரும் ஒரு பஞ் டயலாக்கை பரவலாகப் பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். சிங்கம் எப்பொழுதும் சிங்கிளாகத் தான் வரும். பன்றிகள்தான் கும்பலாக வரும் என்ற வசனம் அது.அதாவது தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள பெரிய கட்சி சிங்கங்களும் பன்றிகளுமாக சிவஞானம் கூறுவது போல அறுவான்களும் குறுக்கால போவான்களுமாக சிதறிப் போகிறது என்று பொருள்.அது தேசியக் கூட்டுணர்வோடு ஒரு திரட்சியாக இல்லை.

வேட்பாளர் பட்டியல் வெளிவந்ததிலிருந்து கட்சிக்குள் மகளிர் அணியும் தவறாசா அணியும் ஏனைய அணிகளும் நொதிக்கத் தொடங்கி விட்டன. தவராசா அணி சுயேச்சையாகப் போட்டியிடுகின்றது. இவ்வாறு தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பூசல்கள் ஏற்கனவே தூர்ந்து போன கட்சியை மேலும் சிதைக்கக்கூடும். அவ்வாறு தமிழரசுக் கட்சி பலவீனமடையும் பொழுது அதனால் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறு கட்சிகள் அல்லது வேறு கூட்டுக்கள் உண்டா?

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது தேசியவாத அரசியல் குறித்த பொருத்தமான நடைமுறைச் சாத்தியமான தரிசனங்களைக் கொண்டிராத ஒரு கட்சி.தங்களைத் தியாகிகள் ஆகவும் புனிதர்களாகவும் காட்டுவதற்காக மற்றவர்களுக்குத் துரோகிப் பட்டம் சூட்டும் ஒரு கட்சி. தன்னை புத்திசாலிகள், கொள்கைவாதிகளின் கட்சியாகக் காட்டிக்கொள்ளும் ஒரு கட்சி. தேசம் என்பது புனிதர்கள், தியாகிகள், கொள்கைவாதிகளை மட்டும் கொண்டதல்ல. திருடர்கள். அயோக்கியர்கள் சமானியர்கள் என்று எல்லா வகைப்பட்டவர்களினதும் திரட்சி தான் தேசம்.

முன்னணியின் அரசியல் பெருந் திரட்சிக்கு உரியதல்ல. அதனால் முதன்மைக் கட்சியாக மேலுயர முன்னணியால் இதுவரை முடியவில்லை.



அரசியல் என்பது சாத்தியக்கூறுகளின் கலை. சாத்தியமானவற்றுக் கூடாகத் தான் கொள்கையைப் பரவலாக்கலாம். மக்கள் மயப்படுத்தலாம். அதை ஒரு திரண்ட அரசியல் சக்தியாக மாற்றலாம். தூய தங்கத்தை வைத்துக் கொண்டு ஆபரணம் செய்ய முடியாது. அதில் செம்பு கலக்க வேண்டும். செம்பைக் கலக்காவிட்டால் தங்கம் பிரயோக நிலைக்கு வராது. அப்படித்தான் நடைமுறைச் சாத்தியமாகச் சிந்திக்காவிட்டால் கொள்கை மக்கள் மயப்படாது. இது தான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிடம் உள்ள பிரதான பலவீனம். அவர்களால் தேசத்தைத் திரட்ட முடியாது. எனவே தமிழரசுக் கட்சி சிதையும் போது ஏற்படும் வெற்றிடத்தில் ஒரு பிரதான நீரோட்டக் கட்சியாக மாறி ஆசனங்களைக் கைப்பற்றத் தேவையான அரசியல் தரிசனமும் நெகிழ்வும் முன்னணியிடம் இல்லை.

அடுத்தது குத்துவிளக்குக் கூட்டணி. அந்த கூட்டணி ஜனாதிபதித் தேர்தலின் பின் சங்குச் சின்னத்தை கைப்பற்றியதன் மூலம் சங்குக் கூட்டணியாக மாறியிருக்கிறது. அங்கேயே சர்ச்சைகள் உண்டு. ஒரு கூட்டு வெற்றியை அதன் பங்காளிகளில் ஒரு பகுதி மட்டும் சுவீகரிக்கப் பார்க்கின்றது. சங்கு இப்பொழுது தமிழ்த் தேசிய பொதுக்கூட்டமைப்பின் சின்னம் அல்ல.

ஏனெனில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு இப்பொழுது இல்லை. அதற்குள் இருந்த தமிழ் மக்கள் பொதுச்சபை தேர்தலில் ஈடுபடவில்லை. தமிழ்த் தேசிய பசுமை இயக்கமும் தமிழ் மக்கள் கூட்டணியும் அக்கூட்டுக்குள் இல்லை. எனவே சங்கு பொதுக் கட்டமைப்பின் சின்னமல்ல. சங்குக்கு விழுந்த 2 லட்சத்து 26 ஆயிரம் வாக்குகளும் சங்குச் சின்னத்தை எடுத்து வைத்திருக்கும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு கிடைக்குமா?

சங்குக்கு விழுந்த வாக்குகள் தேசத் திரட்சிக்கு விழுந்த வாக்குகள். அதில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் தேசத் திரட்சி என்ற அடிப்படையில் வாக்களித்திருக்கிறார்கள். அரியநேத்திரன் ஒரு குறியீட்டு வேட்பாளர். ஏறக்குறைய ஒரு துறவி போல அவர் தேர்தலில் நின்றார். அவருக்கு வாக்குத் திரட்டுவதற்காக மக்கள் அமைப்பை சேர்ந்தவர்கள் துறவிகளைப் போல சம்பளம் வாங்காமல் இரவு பகலாக வேலை செய்தார்கள். அவரை வேட்பாளராக முன்னிறுத்திய பொதுக் கட்டமைப்பைச் சேர்ந்த கட்சிகள் நாடாளுமன்றத் தேர்தலை நோக்கித் தான் உழைத்தன என்பது எல்லாருக்கும் தெரியும். ஆனாலும் பொது வேட்பாளரை நோக்கி அவர்கள் திரட்டிய வாக்குகள் பொதுவானவை. பொதுவான வாக்குகள் இப்பொழுது ஐந்து கட்சிகளின் கூட்டமைப்பாக உள்ள சங்குக் கூட்டணிக்கு மட்டும் கிடைக்குமா?

கிடைக்காது. உதாரணமாக, கிளிநொச்சியில் தமிழரசுக் கட்சி சங்குக்காக வேலை செய்தது. அது முழுமையாக வேலை செய்ததா இல்லையா என்ற கேள்வி ஒருபுறமிருக்க, அங்கு கிடைத்த வாக்குகளுக்குள் தமிழரசு கட்சியின் வாக்குகளே அதிகம் உண்டு. எனவே சிறீதரனா? சங்கா? என்று வரும் பொழுது சிறீதரனின் ஆதரவாளர்கள் அவருக்குத்தான் வாக்களிப்பார்கள்.

அப்படித் தான் மட்டக்களப்பிலும் அரியநேத்திரனுக்காக சிறீநேசனும் உட்பட பல மூத்த தமிழரசுக் கட்சிக்காரர்கள் ஒன்றாக நின்று உழைத்தார்கள். தங்களின் ஒருவருக்கு அவர்கள் பொதுவாக வாக்குத் திரட்டினர்கள். ஆனால், நாடாளுமன்றத் தேர்தலில் அவர்களுடைய வாக்குகள் வீட்டுக்குத் தான் விழும். சங்குக்கு அல்ல. அப்படித்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த அருண் தப்பிமுத்து திரட்டிய வாக்குகளும் சங்குக்கு விழாது.

மேலும் யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சரவணபவன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் உட்பட பலரும் சங்கின் வெற்றிக்காக உழைத்திருக்கிறார்கள். அவர்கள் சங்கு கூட்டணிக்குள் நிற்கவில்லை. மாறாக தவறாசாவின் சுயேச்சைக் குழுவாக களமிறங்குகிறார்கள். அவர்கள் சங்குக்கு திரட்டிய வாக்குகள் இனி அவர்களுடைய சுயேச்சைக் குழுவுக்குத் தான் அதிகமாக விழும்.

அப்படித்தான் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் சுயேச்சையாக நிற்கும் தமிழர் சமஉரிமை அமைப்பும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளருக்காக விசுவாசமாக உழைத்தது.அ ந்த அணி இப்பொழுது சுயேச்சையாகக் கேட்கின்றது. எனவே பொது வேட்பாளருக்காக அவர்கள் சேகரித்த வாக்குகள் அந்த சுயேச்சைக்கு விழுமா அல்லது சங்குக்கு விழுமா? தமிழ் மக்கள் சின்னத்தைப் பார்த்து மயங்குவார்களா?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



இது தான் பிரச்சினை. ஒரு சன்னியாசி போல அரியநேத்திரன் தேர்தலில் நின்ற பொழுது தமிழ் மக்கள் கூட்டுணர்வோடு அவருக்கு வாக்களித்தார்கள். அதே கூட்டுணர்வோடு இப்பொழுது வாக்களிக்க மாட்டார்கள். கட்சி விசுவாசம், தனி நபர் விசுவாசம், பிரதேச விசுவாசம்,ஊர் விசுவாசம் போன்ற பல காரணிகளாலும் வாக்குகள் சிதறடிக்கப்படும் ஆபத்து அதிகமுள்ள ஒரு தேர்தல் இது. மேற்சொன்ன அனைத்து விசுவாசங்களும் தேசியக் கூட்டுணர்வுக்கு விரோதமானவை. பொது வேட்பாளருக்கான தேர்தலில் பிரச்சாரப் பணிகள் தொடங்கிய போது எமக்காக நாம் என்று கூறப்பட்டது. ஆனால் நடக்கவிருக்கும் தேர்தலில் எனக்காக நான் என்பதுதான் நடைமுறையாக உள்ளது.

அடுத்தது, விக்னேஸ்வரனின் கட்சி. அது இப்போதைக்கு பிரதான நீரோட்டக் கட்சியாக பலமாக எழும் என்று நம்பமுடியாத ஒரு கட்சிச் சூழல் தான் காணப்படுகிறது. நடக்கவிருக்கும் தேர்தல் அந்த கட்சியின் அடுத்தகட்ட வளர்ச்சியைக் காட்டும்.

தொகுத்துப் பார்த்தல், யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் மட்டும் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சங்குக் கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி, ஜேவிபியின் கூட்டணி, சுயேச்சைக் குழுக்கள் என்று மொத்தம் 44 தரப்புகள் தமிழ் வாக்குகளைக் கேட்கப் போகின்றன. இதில் அனுர அலை எந்த அளவுக்கு வாக்குகளைக் கவரும் என்பதை இப்பொழுது மதிப்பிடுவது கடினம்.

இப்படி ஒரு நிலையை கிழக்கில் அனுமதித்தால், குறிப்பாக திருகோணமலையிலும் அம்பாறையிலும் தமிழ் பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விடும் என்ற அச்சம் அங்குள்ள சிவில் சமூகங்களிடம் உண்டு. திருகோணமலையில் கத்தோலிக்கத் திருச்சபையின் ஆயர் இது தொடர்பில் தலையிட்டிருக்கிறார். அங்கே போட்டித் தவிர்ப்பு உடன்படிக்கை ஒன்று எட்டப்பட்டுள்ளது. அதனால் வாக்குகள் சிதறுவது தடுக்கப்பட்டு குறைந்த பட்சம் ஒரு பிரதிநிதித்துவமாவது பாதுகாக்கப்படலாம்.ஆனால் அம்பாறையில் நிலைமை அவ்வாறில்லை.

ஆக மொத்தம் வரும் நாடாளுமன்றத் தேர்தலானது தமிழ் மக்களை வாக்காளர்களாகச் சிதறடிக்கப் போகிறது. சில கிழமைகளுக்கு முன்பு தேசமாகத் திரள்வோம் என்ற கோஷம் ஜனாதிபதித் தேர்தலில் பலமாக ஒலித்தது. ஆனால் துரதிஷ்டவசமாக நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் கட்சிகளாகச் சிதறும் ஆபத்தே அதிகரித்து வருகின்றது. நண்பர் ஒருவர் பின்வருமாறு கேட்டார் இப்படியே சிதறிப்போனால் சனங்கள் தெள்ளும் வேண்டாம் நாயும் வேண்டாம் என்று சலிப்படையக் கூடுமா?

# சமமான கையாளுகை சரி வருமா?

கடந்த வாரம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அமைச்சரவை பேச்சாளரும், வெளிவிவகார அமைச்சருமான, விஜித ஹேரத், இந்தியாவையும் சீனாவையும் ஒரே சமமாகத் தான் பார்க்கிறோம் எனக் கூறியிருந்தார்.

சீனாவின் பாய்மரப் பயிற்சிக் கப்பல் கொழும்பு துறை முகம் வரப்போகும் தகவலை அறிவிக்கும் போதே, அவர் இந்தக் கருத்தைக் குறிப்பிட்டிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் பதவியில் இருந்த போது சீனாவின் ஆய்வுக் கப்பல்கள் அடிக்கடி இலங்கைக்கு வந்து செல்வது தொடர்பாக இந்தியாவுடன் முரண்படுகின்ற சூழல் ஏற்பட்டது. சீனாவின் ஆய்வு கப்பல்கள் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும், அவை இலங்கைக் கடற்பரப்புக்குள் வந்து, இந்தியாவை உளவு பார்ப்பதாகவும் இந்தியாவின் பாதுகாப்பு நிலைகளை கண்காணிப்பதாகவும் புதுடில்லியில் இருந்து கொழும்புக்கு தொடர்ச்சியாக நச்சரிப்புகள் வந்து கொண்டிருந்தன.

அவ்வாறான நிலையில், இலங்கைக் கடற்பரப்பில் சீன ஆய்வுக் கப்பல் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்கவில்லை. கொழும்பில் எரிபொருள் நிரப்பிச் செல்வதற்கு மட்டும், அனுமதி வழங்கப்பட்டது. இதனால் எழுந்த சிக்கல்களை அடுத்து அரசாங்கம் எந்தவொரு நாட்டினதும் ஆய்வுக் கப்பலையும் இலங்கையின் பொருளாதாரக் கடல் எல்லைக்குள் அனுமதிப்பதில்லை என்று ஒரு வருட காலத்திற்கு தடை விதித்தது. எனினும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தில் வெளிவிவகார அமைச்சராக இருந்த அலி சப்ரி இந்தத் தடை வரும் டிசம்பர் மாதத்துடன் நீக்கப்படும் என்றும், வெளிநாட்டு போர்க்கப்பல்கள் வருகை தொடர்பாக, ஒரு பொறிமுறையை உருவாக்கப் போவதாகவும் கூறியிருந்தார். அதற்கிடையில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்து புதிய அரசாங்கம் பதவிக்கு வந்திருக்கிறது.

சீனாவின் ஆய்வுக் கப்பல்கள் தொடர்பாக முன்னைய தடை நீடிக்குமா அல்லது புதிய அரசாங்கம் புதிய கொள்கையை அறிவிக்குமா கேள்விகள் இருந்து வந்தன. இந்த நிலையில் தான் சீனாவில் பாய்மர பயிற்சி கப்பலுக்கு அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது. இந்த அனுமதி விசேடமான ஒன்று அல்ல.

இலங்கை அரசாங்கம் ஆய்வுக் கப்பல்களுக்கு தடை விதித்த பின்னர், இந்தப் பகுதியை கண்காணிப்பதை சீனா தவிர்த்து விட்டது என்று கருதுவதற்கில்லை. கடந்த சில மாதங்களாக சீனாவின் 3 ஆய்வுக்கப்பல் வங்காள விரிகுடாவின் உள்ளேயும், அந்தமான் நிக்கோபார் கடற்பகுதியிலும், இலங்கைக்கு தெற்காகவும், இந்தோனேஷியாவுக்கு மேற்காகவும் உள்ள பகுதிகளில் ஆய்வுகளை மேற் கொண்டிருந்தன.

இந்தக் கப்பல்கள் ஆய்வுகளில் ஈடுபட்ட காலப்பகுதியில், இந்தியா சில முக்கியமான ஏவுகணைகளை ஒடிசாவில் இருந்து ஏவியிருந்தது. இலங்கைக்கு சீன ஆய்வு கப்பல்கள் வராமல் போனாலும் அவை இந்தியப் பெருங்கடலில் இந்தியாவை அண்டிய பகுதிகளில் தொடர்ந்து சுற்றிக் கொண்டிருக்கின்றன. இதனை இந்திய கடற்படையின் தளபதிகள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இந்திய பாதுகாப்பு வல்லுனர்களும் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

அது தவிர கப்பல் நடமாட்டங்களை வெளிப்படுத்தும் செய்மதி மற்றும் ரேடர் தளங்களும் இதனை உறுதி செய்திருக்கின்றன.

ஆனாலும், இலங்கைக்கு சீன கப்பல்கள் வருவது முரண்பாட்டுக்குரிய ஒரு விடயமாக அண்மைக்காலத்தில்





மாறி இருக்கிறது. இந்தியாவும் அமெரிக்காவும் சீன ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக்கு வருவதை இங்கு தரித்திருப்பதை ஆய்வுகளை முன்னெடுப்பதை விரும்பவில்லை. அதற்கு பிரதான காரணம், பிராந்திய அதிகார போட்டி. பூகோள அரசியல் போட்டியின் ஒரு கட்டம் இது. இந்த போட்டிக்குள் சீனாவும் இந்தியாவும் சிக்கிக் கொண்டிருக்கின்றன. இரண்டு நாடுகளும் ஒன்றை ஒன்று வெட்டியாட முனைகின்றன. இந்த ஆட்டத்திற்குள் இதுவரை காலமும் இலங்கையும் சிக்கிக் கொண்டிருந்தது.

இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த அத்தனை ஜனாதிபதிகளும், இந்தியாவிற்கு செல்கின்ற போது அல்லது இந்தியா பாதுகாப்பு கரிசனைகளை எழுப்புகின்ற போது, ஒரு பதிலை தெளிவாக கூறி வந்திருக்கிறார்கள்.

இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதற்கு இலங்கை நிலப்பரப்பை பயன்படுத்த ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம் என்பதே அந்த வாக்குறுதி. மஹிந்த ராஜபக்ஷவும், இந்த வாக்குறுதியைக் கொடுதிருக்கிறார். மைத்திரிபால சிறிசேனவும் இதனை இத்திருக்கிறார் கோட்டாபய ராஜபக்ஷவும், ரணில் விக்கிரமசிங்கவும், மாத்திரமன்றி இப்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் இந்த வாக்குறுதியை இந்தியாவிற்கு கொடுத்திருக்கிறார்கள்.

அண்மையில் இலங்கைக்கு வந்த இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரிடம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இதே வாக்குறுதியை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக சீனா தொடர்பாக நீடித்து வருகின்ற சர்ச்சைகளும், இந்தியாவுக்கு இருந்து வருகின்ற அச்சங்களும் இத்தகைய வாக்குறுதிகளை கொடுக்கும் நிலையை ஏற்படுத்தி இருக்கிறது.

ஆனாலும் எந்தவொரு இலங்கைத் தலைவரின் வாக்குறுதியையும் இந்தியா முழுமையாக நம்ப தயாராக இல்லை. மஹிந்த ராஜபக்ஷவுடனும் இந்தியா முரண்பட்டது. மைத்திரி, கோட்டா, ரணில் அரசுகளுடனும் இந்தியா வுக்கு அவ்வப்போது உரசல்கள் ஏற்பட்டன. சீனாவை மிகையாக அனுசரித்து செல்கிறது, ஆதரவு வழங்குகிறது என்பது இந்தியாவின் குற்றச்சாட்டு அல்லது சந்தேகமாக உள்ளது. ஆட்சிகள் மாறினாலும் இந்தியாவுக்கு இலங்கை தொடர்பான அச்சமும் சந்தேகமும் தீரவில்லை.

இதன் வெளிப்பாடாகத்தான் ஒவ்வொரு ஆட்சியாளரும் அதிகாரத்துக்கு வருகின்ற போது, இந்தியா தனது நிலைப்பாடு இதுதான், இதனை மீறி செல்லக் கூடாது என்று கொழும்பில் உள்ள தலைவர்களுக்கு இந்தியா தெளிவாக எடுத்துக் கூறி வருகிறது. இப்படிப்பட்ட பின்னணியில், இந்தியாவையும் சீனாவையும் ஒரே விதமாகத்தான் அணுகப் போகின்றோம், சமமாகத்தான் கையாள போகின்றோம் என்ற வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தின் கருத்து உற்று நோக்கப்பட வேண்டிய ஒன்று. இதேபோன்று தான் முன்னைய அரசாங்கங்களும் கூறியிருந்தன. இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான அரசியல் போட்டிக்குள் நாங்கள் சிக்கிக் கொள்ள மாட்டோம் என்றெல்லாம் கூறினார்கள்.

இப்போதைய ஜனாதிபதி அநுரகுமாரவும் கூட கொஞ்சம் நவீன பாணியில், இரண்டு நாடுகளுக்கும் இடையில் 'சாண்ட்விச் துண்டு போல' சிக்கிக் கொள்ள முடியாது எனக் கூறியிருந்தார்.

இரண்டு பேரும் கடிக்க தொடங்கினால் இலங்கை என்ற சாண்ட்விச் துண்டின் நிலை பரிதாபமாகி விடும். எதுவுமே மிஞ்சாது. இரண்டு நாடுகளுக்கும் பொதுவாக, ஒன்றுடன் ஒன்று முரண்பாட்டையோ பிரச்சினைகளையோ ஏற்படுத்தாமல் காலத்தைக் கடத்துவது கடினமானது. அந்த முயற்சியில் முன்னைய அரசாங்கங்கள் தோல்வி

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்




கண்டிருந்தன.

அநுரகுமாரவுக்கும் அதேவிதமான சில சிக்கல்கள் இருக்கிறது. கிடைத்துள்ள ஆட்சியை வலுவானதாக மாற்றிக் கொள்ள வேண்டும். அதனை பறி கொடுத்து விடாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இதனை அடைவதற்கு இந்திய-இலங்கை முரண்பாடுகளுக்குள் சிக்கிக் கொள்ளாமல் இருப்பது முக்கியம். அவ்வாறு சிக்கிக் கொள்ளாமல் இருப்பது என்பது, கத்தியில் நடக்கும் காரியம். எப்போது வேண்டுமானாலும் சறுக்கலாம். அப்படி சறுக்கினால் குத்தி கிழிக்காமல் விடாது. சமத்துவமாக அணுகுவோம் என்பது வெறும் பேச்சுக்கான ஒரு கருத்தாக இருந்தாலும் அதனை நடை முறைப்படுத்துவது கடினமானது.

அது எந்த வகையில் கடினமானது எந்தக் எனது எந்தக் கட்டத்தில் இறுக்கமானதாக இருக்கும் என்பன போன்ற சூட்டு மங்களை, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கற்றுக் கொள்வதற்கும் சிறிது காலம் தேவைப்படும்.

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# அநுரகுமார அலை என்ன செய்யும்?

அனுரகுமார திசநாயக்கவின் வெற்றி, புதிய அலையொன்றை அல்லது புதிய சூழலொன்றை உருவாக்கியுள்ளது. அது சிங்களம், முஸ்லிம், தமிழ், மலையகம் என எந்த வேறுபாடுகளும் இல்லாமல் நாடுமுழுவதிலும் உருவாகியிருக்கும் புதிய அலையாகும்.

இதனால் சிங்களத் தேசியம், தமிழ்த் தேசியம், முஸ்லிம்தேசியம், மலையகத் தேசியம் என்பவற்றைக் கடந்து பெருவாரியான மக்கள் NPP எனப்படும் தேசிய மக்கள் சக்தியின் பக்கம் திரளும் நிலை உருவாகியிருக்கிறது. சரியாகச் சொல்வதென்றால், அனுரவின் பக்கமாகத் திரள்கிறது என்பதே சரியாகும்.

ஏனெனில் இந்த அலையோ, இந்தத் திரட்சியோ JVP அல்லது NPP என்பவற்றின் சித்தாந்தத்தைப் புரிந்து கொண்டு எழுந்ததில்லை. இதுவரையிலான அரசியற் செல்நெறியில் ஒரு மாற்றம் வேண்டும். அதை அனுர தரப்புச் செயற்படுத்தும். அதற்கொரு வாய்ப்பைக் கொடுத்துப் பார்ப்போம் என்ற நம்பிக்கையினால் ஏற்பட்டிருப்பது. இதையே பெரும்பாலான அனுர ஆதரவாளர்கள் வெளிப்படையாகக் கூறுகிறார்கள்.

ஜனாதிபதித் தேர்தலின் போது நாடு அனுரவோடு என்ற வாக்கியத்தைக் கொண்ட சுவரொட்டிகள் நாடெங்கும் காணப்பட்டன. அது உண்மையோ என்று யோசிக்கக் கூடிய அளவுக்கே தற்போதைய சூழல் உள்ளது. வரலாறு சிலவேளை இப்படியான வரலாற்றுப் பாத்திரங்களின் வழியாக அதிசயங்களை நிகழ்த்துவதுண்டு. அனுர என்ற இந்த வரலாற்றுப் பாத்திரம், அப்படியான அதிசயத்தை உருவாக்குகிறது போலும். அல்லது வரலாற்றுப் பாத்திரமாக அனுர மாறவும் கூடும். இந்த மதிப்பீட்டுக்கு நாம் இன்னும் கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டும்.

அனுரவின் மூலம் தேசிய மக்கள் சக்தி (Npp)க்கு இதுவரையில்லாத அளவுக்குப் பேராதரவு பெருகியிருக்கிறது என்பது உண்மையே! இன்னொரு நிலையில் இது தமிழ், முஸ்லிம், மலையக, சிங்களத் தேசியங்கள் என்ற அடையாளக் கோடுகளைத் தகர்த்து, ஐக்கிய இலங்கை என்ற பொதுப் பரப்பிற்குள் சொல்லாமல் கொள்ளாமல் எல்லோரையும் இழுத்து விடப் பார்க்கிறது. இது, இதுவரையிலும் ஆட்சியிலிருந்தோர் ஐக்கிய இலங்கைக்குள் ஒன்று பட்ட இலங்கைக்குள் அனைத்துத் தேசிய இனங்களையும் கட்டிப் போடுவது எனச் சூழ்ச்சிகளின் மூலம் மேற்கொண்ட முயற்சிகளை விட இலகுவாக அனுர விக்கெற்றுகளை வீழ்த்தியிருக்கிறார் எனலாம்.

இதை விளங்கியோ விளங்காமலோ தமிழ், முஸ்லிம், மலையகச் சமூகங்கள் அனுர அலையில் உள்ளீர்க்கப்படுகின்றன. இதற்கு இன்னொரு காரணம், தெற்கிலே உள்ள ஏனைய அரசியற் சக்திகள் தோற்றதைப் போல தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகள் தோற்றுப் போனதுமாகும். அதாவது அவற்றின் நம்பகத்தன்மை குறைவடைந்தமையாகும்.

இதனால் தற்போது உருவாகியிருக்கும் NPPக்கு ஆதரவான அலையைக் குறித்தோ அல்லது NPPஐப் பற்றியோ யாரும் விமர்சிக்கவும் முடியாது. மதம், அரசியல், கலை போன்றவற்றில் மக்களுக்கு ஈர்ப்பு ஏற்பட்டு, அது தீவிரப் பற்றாக வளர்ச்சியடைந்து பேரபிமானமாக மாறி விடுவதுண்டு. இந்த ஈர்ப்பு அமைப்புகள், கட்சிகளிடம் மட்டுமல்ல, தனி நபர்களில் மீதும் உருவாகும். அப்படி உருவாகி விட்டால் அதற்குப் பிறகு அந்த அமைப்பையோ, அந்தத் தலைவரையோ யாரும் கேள்வி கேட்கவும் முடியாது. விமர்சிக்கவும் முடியாது. அப்படி விமர்சித்தால் அல்லது கேள்வி கேட்டால், விமர்சிப்போரும் கேள்வி கேட்போரும் துரோகிகளாகவே நோக்கப்படுவர். இப்படியான ஒரு நிலை இப்போது உருவாகியுள்ளது.

அந்தளவுக்கு NPP மீதான பேரபிமானம் சகல தரப்பு மக்களிடமும் மேலோங்கியுள்ளது.

இந்த அபிமானம் நாட்டிற்குள் மட்டுமல்ல, நாட்டுக்கு வெளியே புலம் பெயர்ந்து வாழ்கின்ற இலங்கையர்களிடத்திலும் பரவியுள்ளது. இதனால் பாராளுமன்றத் தேர்தலில் NPPஐ



வெற்றியடைய வைப்பதற்குக் களப் பணியாற்றுவதற்கென்று இலங்கைக்குப் பயணித்துக் கொண்டுள்ளனர்.

இந்தப் பேரார்வத்துக்குக் காரணம், இலங்கையில் மாற்றம் நிகழ்த்தப்பட வேண்டும். புதிய அரசியற் பண்பாடொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற விருப்பமேயாகும்.

இந்த விருப்பம் நீண்ட காலமாகப் பலருடைய மனதிலும் நிறைவேறாமலிருந்த மாபெரும் கனவாகும். அந்தக் கனவை நனவாக்குவதற்கான வரலாற்றுத் தருணம் இதுவெனப் பலரும் கருதுகின்றனர். ஆகவேதான் அதற்கான பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்று செயலாற்ற விளைகின்றனர்.

இந்த நிலையை உருவாக்கியது கடந்த காலத்தில் ஆட்சியதிகாரத்திலிருந்த தரப்புகளேயாகும். அவற்றின் கூட்டுத் தவறுகளே அரகலய (எழுச்சி). அதுவே NPPக்கான மாபெரும் ஆதரவு அலையை உருவாக்கியுள்ளது. இப்போது NPP எதிர் பாத்திராத அளவுக்கு இந்த அலை உச்சமடைகிறது. NPP சும்மா இருக்கவே வேலை நடக்கிறது என்று சொல்வார்களல்லவா. அப்படிச் சொல்லுமளவுக்கான நிலைமை — சூழல் — NPPக்குச் சாதகமாக உருவாகியுள்ளது.

பேராளுமைகள் அல்லது வரலாற்றுச் சூழலைக் கையாளத் தெரிந்த ஆற்றலர்கள் எழுச்சியடையும் போது இவ்வாறான மாற்றச் சூழல்'' (Condition of Change)அமைவதுண்டு. இது எப்படி அமையும் என்பது NPPயின் அடுத்த கட்ட நகர்வைப் பொறுத்தே தெரியும். ஏனென்றால், NPP யோ அனுரவோ புரட்சிகரப் போராட்டத்தின் மூலமாக அதிகாரத்தைக் கைப்பற்றவில்லை. தேர்தல் ஜனநாயக விதிமுறைகளின் வழியாகவே — சட்ட வரம்புக்குட்பட்டே (Legal definition) ஆட்சியதிகாரம் கைப்பற்றப்பட்டுள்ளது. ஆகவே அந்த விதிகளின்படி, அந்த வரையறைகளுக்குட்பட்டே மாற்றங்களை நிகழ்த்த முடியும். அதற்குக் கால அவகாசமும் வரையறுக்கப்பட்ட மட்டுப்பாடுகளும் இருக்கும்.

ஆனாலும் தமக்குக் கிடைத்த வரலாற்றுத் தருணத்தை அனுரவும் NPPயும் எப்படிப் பயன்படுத்திக் கொள்ளப்போகின்றன? எவ்வாறு மதிப்பைக் கூட்டப் போகின்றன என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும். இதற்கு அது பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற வேண்டும். இப்போது அனுர தலைமையிலான மூவர் கொண்ட அமைச்சரவை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அமைச்சரவையில் அதிரடியாகச் சில வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றக் கலைப்பு, அமைச்சரவை நியமனம், அமைச்சுச் செயலாளர்கள் நியமனம், இழுபறியிலிருந்து பதில் பொலிஸ்மா அதிபர் நியமனம், சுற்றுலாப் பயணிகளுக்கு விசா பெறுவதில் இருந்த நெருக்கடிகளை மாற்றியமைத்தமை, அநாவசியச் செலவுகளைக் குறைக்கும் வகையிலான நடவடிக்கைகள், மீனவர்களுக்கும் விவசாயிகளுக்கும் எரிபொருள் விலைக்குறைப்பு, உர மானியம் போன்றவற்றை வழங்குவதற்கான ஏற்பாடு போன்றவற்றைப் புதிய அமைச்சரவை செய்துள்ளது. இது NPPக்கு மேலும் ஒரு சிறிய கவர்ச்சியையும் நம்பிக்கையையும் உண்டாக்கியிருக்கிறது.

ஆனாலும் எதிர்பார்க்கப்பட்ட ஊழல் வாதிளின் மீதான நடவடிக்கை, ஈஸ்டர் குண்டு வெடிப்பின் சூத்திரதாரிகளைக் கண்டறிவதும் நடவடிக்கை எடுப்பதும் போன்றவற்றில் எந்த முன்னேற்றத்தையும் காணவில்லை. அதைப் போல வடக்குக் கிழக்கில் உள்ள படைத் தரப்பின் உயர் பாதுகாப்பு வலயத்தை நீக்குதல், காணிகளை விடுவித்தல் போன்றவற்றிலும் எந்த மாற்றமும் முன்னேற்றமும் நிகழவில்லை. அதைப் பற்றி அனுர NPP யின் நிலைப்பாடு என்னவென்றும் தெரியாது. ஏனென்றால் அதைப்பற்றிய பேச்சுகளே அந்தத் தரப்பின் வாயிலிருந்து வரவில்லை. பதிலாக பௌத்த பீடங்களிடம் ஆசி வாங்கும் அனுசரணையைப் பெறும் காட்சிகளே வெளியாகின்றன.

இது அனுரவும் NPPயும் மக்களை முன்னிலைப்படுத்துவதை விடவும் பௌத்த பீடங்களைக் குளிர்ச்சியடையச் செய்வதற்கு எடுத்துக் கொள்ளும் பிரயத்தனத்தைக் காட்டுகிறது. அப்படியானால் மாற்றம் எந்த அடிப்படையில் நிகழப் போகிறது? அதனுடைய எல்லைகள் எப்படியாக இருக்கப் போகின்றன என்ற ஒரு தெளிவான காட்சியை இப்பொழுதே நாம் உணரக் கூடியதாக உள்ளது.

ஆனாலும் இதையெல்லாம் கடந்து இப்பொழுது பலருடைய வாயிலும் உச்சரிக்கப்படும் பெயராக அனுரகுமார திசநாயக்க மாறியிருக்கிறார். AKD என்று அனுரவைச் செல்லமாக உரிமையோடு அழைக்கிறார்கள்.

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -




தங்கள் குடும்பத்தில் உள்ள ஒருவரைப் போல அல்லது நெருங்கிய நண்பரைப் போல அனுரவைப் பற்றி நெருக்கமாகப் பேசிக் கொண்டிருக்கின்றனர். ஒவ்வொருவரும் அவருடைய Profileஜ தேடி அறிந்து கொண்டிருக்கிறார்கள். அனுரவின் வீடிருக்கும் தம்பேத்கம என்ற சிறிய —ஆழக் கிராமத்தை நோக்கி YouTuper's குவிகின்றனர். சமூக வலைத்தளங்களில் அனுரவின் படங்களும் நிகழ்காட்சிகளும் செய்திகளுமே நிறைந்து கிடக்கின்றன. ஒரு YouTupe காட்சியில் அவருக்கு MakeUp போடுகின்ற காட்சியைக் கூடப் பார்க்கக் கூடியதாக இருந்தது. சினிமாக் கதாநாயகர்களுக்கிருக்கும் கவர்ச்சிக்கு நிகரானது இது. தேர்தலில் பெற்ற வெற்றியின் மூலம் ஜனாதிபதியாகியது மட்டுமல்ல, ஒரே நாளில் பெரியதொரு கதாநாயகனாகவே அனுரகுமார திசநாயக்கவின் பிம்பம் மேலெழுந்துள்ளது.

(20ம் பக்கம் பார்க்க)



# Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 416 477 2259 | +1 647 700 7208
+1 647 709 1761 | +1 416 709 1536
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2



## மணமகள்

**ID08120873** (F)
25yrs, 5'4" , Annulled , Not Specified , N/A Sevai , Bachelors.. , ECA , Canada

**ID08120869** (F)
40yrs, 5'3" , Single , Aayilyam , N/A Sevai , High School , Sales Excutive , Sri Lanka

**ID08120868** (F)
42yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Pharmacy , Sri Lanka

**ID08120861** (F)
33yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Postgraduate.. , Work , Canada

**ID08120860** (F)
29yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Postgraduate.. , Work , Canada

**ID08120859** (F)
33yrs, 5'1" , Single , Not Specified , N/A Sevai , Postgraduate.. , Work , Canada

**ID08120858** (F)
31yrs, 5'3" , Single , Kettai , N/A Sevai , Masters Degree , Health network , Canada

**ID08120857** (F)
33yrs, 5'6" , Single , Swaathi , 2 Sevai , Masters Degree , Project manager , Canada

**ID08120856** (F)
23yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , High School , Teacher , Canada

**ID08120728** (F)
40yrs, 5'4" , Widowed , Not Specified , N/A Sevai , High School , Teacher , Canada

**ID08120727** (F)
24yrs, 4'5" , Single , Avittam , 3 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120723** (F)
41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , House of Nursing , Malaysia

**ID08120718** (F)
29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada

**ID08120685** (F)
22yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Student Canada

**ID08120650** (F)
26yrs, 4'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Law student ,Sri Lanka

**ID08120711** (F)
30yrs, 5'3" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , Executive , Sri Lanka

**ID08120667** (F)
25yrs, 5'1" , Single , Thiruvaathirai , N/A Sevai , High School , Home , Sri Lanka

**ID08120650** (F)
26yrs, 4'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Law student ,Sri Lanka

**ID08120803** (F)
21yrs, 4'11" , Single , Revathi , N/A Sevai , High School , Beautician , Canada

**ID08120804** (F)
29yrs, 5'6" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , HR Manager , Canada

**ID08120805** (F)
30yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Development.. , Sri Lanka

**ID08120806** (F)
27yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Audit firm , Sri Lanka

**ID08120807** (F)
27yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Beautician.. , Sri Lanka

**ID08120808** (F)
31yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , Acadamic Staff , Sri Lanka

**ID08120809** (F)
32yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Accountant , United Kingdom

**ID08120822** (F)
22yrs, 5'3" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , RN , Canada

**ID08120830** (F)
28yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Senior Consultant , United Kingdom

**ID08120804** (F)
29yrs, 5'6" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , HR Manager , Canada

**ID08120799** (F)
5yrs, 5'3" , Divorced , Poosam , 5 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120795** (F)
31yrs, 5'4" , Single , Aayilyam , 9 Sevai , Bachelors.. , Human Resources.. , Canada



## மணமகன்

**ID08120874** (M)
35yrs, 5'8" , Not Specified , Not Specified , N/A Sevai , Diploma , Tourism , United States

**ID08120870** (M)
29yrs, 5'8" , Single , Makam , 8 Sevai , High School , Work , Sri Lanka

**ID08120867** (M)
39yrs, 5'9" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Architect , Canada

**ID08120866** (M)
24yrs, 5'7" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Student , Sri Lanka

**ID08120864** (M)
34yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Canada

**ID08120863** (M)
32yrs, 5'10" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Own business , Canada

**ID08120862** (M)
28yrs, 5'7" , Single , Revathi , N/A Sevai , Masters Degree , Work , Canada

**ID08120855** (M)
29yrs, 5'6" , Single , Not Available , N/A Sevai , High School , It , Sri Lanka

**ID08120850** (M)
33yrs, 5'6" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , RCMP , Cambodia

**ID08120717** (M)
33yrs, 5'8" , Annulled , Thiruvonam , 6 Sevai , Bachelors.. , Financial. , Canada

**ID08120715** (M)
27yrs, 5'8" , Single , Chathayam/sadayam , 8 Sevai , Bachelors.. , Assistant.. , Canada

**ID08120709** (M)
38yrs, 5'4" , Single , Hastham , 6 Sevai , Diploma , CNC Machine.. , Canada

**ID08120613** (M)
32yrs, 5'7" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer Canada

**ID08120474** (M)
28yrs, 5'7" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , AGM , Sri Lanka

**ID08120335** (M)
30yrs, 5'7" , Single , Revathi , 4 Sevai , Diploma , Business-.. , Canada

**ID08120270** (M)
34yrs, 5'8" , Single , Thiruvaathirai , 10 Sevai , Bachelors.. , Data Analyst , Canada

**ID08119698** (M)
33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08120730** (M)
28yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Engineering ,Sri Lanka

**ID08120810** (M)
42yrs, 6' , Single , Uthiram , N/A Sevai , Bachelors.. , Executive , Sri Lanka

**ID08120812** (M)
32yrs, 5'7" , Single , Avittam , 10 Sevai , Masters Degree , Cyber Security.. , Sri Lanka

**ID08120813** (M)
30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Pharmacy , Canada

**ID08120814** (M)
43yrs, 5'5" , Divorced , Not Specified , N/A Sevai , Bachelors.. , Manager , Canada

**ID08120816** (M)
22yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Canada

**ID08120817** (M)
41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Self Employee , Sri Lanka

**ID08120818** (M)
36yrs, 5'5" , Divorced , Not Specified , N/A Sevai , High School , Carpenter , Sri Lanka

**ID08120820** (M)
30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , Senior manager , Sri Lanka

**ID08120821** (M)
30yrs, 5' , Single , Avittam , N/A Sevai , Bachelors.. , Manager Sri Lanka

**ID08120829** (M)
38yrs, 5'8" , Single , Revathi , N/A Sevai , High School , Restaurant , France

**ID08120786** (M)
36yrs, 5'5" , Single , Chathayam/sadayam , N/A Sevai , High School , Carpenter , Sri Lanka

**ID08120710** (M)
22yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Sri Lanka

# ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் புகட்டிய பாடத்தினால் பாராளுமன்றத் தேர்தலில் இருந்து ஒதுங்கிய அரசியல்வாதிகள்

நாட்டின் நலன்களில் உண்மையான அக்கறை கொண்டவர்களையும் பொதுவாழ்வில் ஊழல் முறைகேடுகளுக்கு இடமளிக்காமல் தூய்மையைப் பேண வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்டவர்களையும் தங்களது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ய வேண்டும் என்று முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு மக்கள் மத்தியில் அக்கறை அதிகரித்திருக்கும் ஒரு நேரத்தில் இந்தத் தடவை பாராளுமன்ற தேர்தல் நடைபெறவிருப்பது முக்கியமான ஒரு மாற்றமாகும்.

தவறான ஆட்சி முறையையும் ஊழல் முறைகேடுகளையும் ஒழித்து புதியதொரு அரசியல் கலாசாரத்தை தோற்றுவிக்கப் போவதாக வாக்குறுதி அளித்து ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று அதிகாரத்துக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரா குமார திசாநாயக்கவிடம் மக்கள் பெரும் எதிர்பார்ப்புகளைக் கொண்டிருக்கிறார்கள்.

பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பழைய பிரதான அரசியல் கட்சிகளை நிராகரித்து எளிமையான குடும்பப் பின்னணியைக் கொண்ட ஒரு இடதுசாரி இயக்கத் தலைவரை நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவிக்குக் கொண்டு வந்ததன் மூலமாக மக்கள் வெளிக்காட்டிய மாற்றத்துக்கான வேட்கையை உரியமுறையில் புரிந்து கொண்டு தனது நிருவாகத்தை நடத்த வேண்டிய பாரிய பொறுப்பை ஜனாதிபதி திசாநாயக்க கொண்டிருக்கிறார். அவருக்கு முன்னால் உள்ள சவால்கள் மிகவும் பாரதூரமானவை.

பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு மகத்தான வெற்றியைத் தருவதன் மூலமாக உறுதியான அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு மக்கள் ஒத்துழைப்பைத் தர வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். பதவிக்கு வந்த பின்னரான மூன்று வாரங்களில் அவரது அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் ஊழலற்ற நிருவாகம் ஒன்றை நடத்துவதில் அவருக்கு இருக்கும் உறுதிப்பாட்டை வெளிக் காட்டுவனவாக அமைந்திருக்கின்றன.

ஜனாதிபதி தேர்தலில் திசாநாயக்கவுக்கு அளித்த ஆதரவையும் விட கூடுதலான ஆதரவை மக்கள் பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வழங்குவதற்கு தயாராகிறார்கள் என்பதற்கான அறிகுறிகள் பெருமளவுக்கு தெரிகின்றன. தேசிய மக்கள் சக்திக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்கள் கிடைக்குமா இல்லையா என்ற வாதப் பிரதிவாதங்களும் மூண்டிருக்கிறது.

ஜனாதிபதி தேர்தலில் திசாநாயக்கவுக்கும் மற்றைய இரு பிரதான வேட்பாளர்களுக்கும் கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் நோக்கும் போது தேசிய மக்கள் சக்திக்கு பாராளுமன்ற தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை கிடைப்பது சாத்தியமில்லை என்று கூறியவர்களும் இருக்கிறார்கள். அதேவேளை, தேசிய மக்கள் சக்திக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்கள் கிடைத்தால் அது ஆபத்தாக அமையும் என்று வேறு சிலர் எச்சரிக்கையும் செய்கிறார்கள்.

ஆனால் தற்போதைய அரசியல் நிலைவரத்தை நோக்கும் போது தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்குமா இல்லையா என்பது அவர்கள் சகல மாவட்டங்களிலும் நிறுத்தியிருக்கும் வேட்பாளர்களை மக்கள் எவ்வாறு நோக்குகிறார்கள் என்பதிலேயே பெருமளவுக்கு தங்கியிருக்கிறது.

கடந்த வெள்ளிக் கிழமையுடன் நியமனப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் நிறைவடைந்து விட்டன. சிறந்த கல்வியையும் அனுபவத்தையும் கொண்ட ஊழலற்ற வேட்பாளர்களையே சகல தேர்தல் மாவட்டங்களிலும் தாங்கள் நிறுத்தியிருப்பதாக தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி. ) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கூறினார்.



நாம் களமிறக்கியிருக்கும் வேட்பாளர்களில் பெரும்பாலானவர்கள் இதுவரையில் அரசியலில் ஈடுபடாதவர்கள். புதிய பாராளுமன்றம் புதிய முகங்களையும் வித்தியாசமான அணியையும் கொண்டதாக அமையும். அவர்கள் மீது நம்பிக்கை வைக்குமாறு நாட்டு மக்களைக் கேட்டுக் கொள்கிறோம். எமது வேட்பாளர் பட்டியல்கள் கல்விமான்களையும் தொழில்சார் நிபுணர்களையும் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த முக்கியஸ்தர்களையும் கொண்டதாக இருக்கின்றது என்று அவர் மேலும் கூறினார்.

இதுவரையில் பொதுவெளியில் தெரிந்திராத புதுமுகங்கள் பெரும் எண்ணிக்கையில் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டிருப்பதால் அவர்களுக்கு மக்கள் அமோக ஆதரவை வழங்குவார்களா என்ற கேள்வியும் எழவே செய்கிறது. ஆனால், இதுவரை காலமும் பதவிகளில் இருந்த அரசியல்வாதிகள் மீது மக்கள் கடுமையான வெறுப்படைந்திருக்கும் சூழ்நிலையில் புதியவர்களை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்வதில் கூடுதல் முனைப்பை அவர்கள் காட்டுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் எனலாம்.

பொதுவாழ்வைத் தூய்மைப்படுத்தப் போவதாக சூளுரைத்திருக்கும் ஜனாதிபதி திசாநாயக்க மீதான நம்பிக்கையை வெளிக்காட்டும் முறையிலேயே மீண்டும் மக்கள் வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். கடந்த காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபைக்குள் நடத்திய காடைத்தனங்களையும் மக்கள் மனதில் நிச்சயம் வைத்திருப்பார்கள். சபை நடவடிக்கைகளை பார்வையிடுவதற்கு பாடசாலை மாணவர்களை அனுமதிப்பதை சபாநாயகர் இடைநிறுத்திய ஒரு காலகட்டமும் இருந்தது.

மதுவுக்கும் போதைப் பொருளுக்கும் அடிமையானவர்கள் பிறகு அவற்றை உற்பத்தி செய்வதையே தொழிலாகக் கொண்டு பெரும்பணம் சம்பாதித்து இறுதியில் பாராளுமன்றத்திற்குள்ளும் வந்துவிட்டார்கள் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒரு தடவை கூறியது நன்றாக நினைவிருக்கிறது.

மக்கள் தங்களை நிச்சயம் நிராகரிப்பார்கள் என்ற பயத்தில் பல அரசியல்வாதிகள் இந்த தடவை பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடவில்லை. கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தவர்களில் முப்பத்தைந்துக்கும் அதிகமானவர்கள் மீண்டும் போட்டியிட முன்வரவில்லை. அதே வேளை, சிலர் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாகவும் அறிவித்திருக்கிறார்கள்.

விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, சம்பிக்க ரணவக்கவின் ஐக்கிய குடியரசு முன்னணி போன்ற கட்சிகள் தேர்தலில் இருந்து முற்றாகவே ஒதுங்கி விட்டன.

வயது முதிர்ந்தும் கூட அரசியலில் இருந்து ஓய்வு பெறவிரும்பாத சில அரசியல்வாதிகள் மாத்திரமல்ல, இளைய அரசியல்வாதிகள் சிலரும் கூட தங்களது கட்சிகளின் தேசியப் பட்டியலின் ஊடாக பாராளுமன்றத்துக்கு மீண்டும் வருவதற்கு தீர்மானித்திருக்கிறார்கள்.

தேசிய மக்கள் சக்தி பெருமளவில் புதிய வேட்பாளர்களை களமிறக்கியதால் ஏனைய அரசியல் கட்சிகளும் அவற்றின் வேட்பாளர்கள் தெரிவில் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள நிர்ப்பந்திக்கப் பட்டன. ஆனால், பழைய பாரம்பரிய கட்சிகளினால் பெருமளவுக்கு புதியவர்களை களமிறக்கக்கூடியதாக இருக்கவில்லை. புதியவர்கள் அந்த கட்சிகளின் சார்பில் போட்டியிடுவதற்கு விருப்பத்தைக் காண்பிக்கவில்லை. அதனால் அந்த கட்சிகளின் வேட்பாளர் பட்டியல்கள் பெருமளவுக்கு பழைய முகங்களால் நிறைந்தவையாகவே இருக்கின்றன.

ஊழல் மிகுந்த அரசியல் கலாசாரத்துக்கு எதிராக வாக்களிப்பதற்கு மக்கள் உறுதி பூண்டிருப்பதால் பாராளுமன்ற தேர்தலில் தரம்வாய்ந்த வேட்பாளர்களை களமிறக்கா விட்டால் பிரதான கட்சிகள் மக்களினால் முற்றாக நிராகரிக்கப்பட்டு வரலாறாகி விடக்கூடிய ஆபத்து இருக்கிறது என்று சிவில் சமூக அமைப்புக்கள் ஏற்கெனவே எச்சரிக்கை செய்திருந்தன.

தேர்தல்களில் போட்டியிடுவதற்கு நேர்மையான வேட்பாளர்களை அரசியல் கட்சிகள் நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை மக்களிடமிருந்து இப்போது தான் வருகிறது என்றில்லை. முன்னரும் மக்கள் அவ்வாறே விரும்பினார்கள். ஆனால் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மக்களின் விருப்பத்தை மதிக்கவில்லை. பொது வாழ்வுக்கு பொருத்தமில்லாதவர்களையும் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களையும் அவர்கள் திரும்பத் திரும்ப வேட்பாளர்களாக நியமித்து பாராளுமன்றத்தின் தரத்தை குறைத்தார்கள்.

கொலைக் குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையிலும் சில அரசியல்வாதிகள் கூடுதல் விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவானதை நாம் கண்டிருக்கிறோம். பணபலமும் அடியாள் பலமும் கோலோச்சுகின்ற அரசியலில் பழிபாவத்துக்கு அஞ்சாத அத்தகைய பேர்வழிகள் கட்சிகளின் தலைவர்களுக்கு தேவைப்பட்டார்கள். பாதாள உலகக் கும்பல்களுக்கு அரசியல் உயர்மட்டத்தில் செல்வாக்கு இருப்பதற்கு அதுவே அடிப்படைக் காரணம்.

கட்டுரையாளர்:-
மூத்த ஊடகவியலாளர்
- வீ.தனபாலசிங்கம் -



நாட்டின் அதியுயர் சட்டவாக்க சபையான பாராளுமன்றத்தில் அண்மைக் காலத்தில் அங்கம் வகித்தவர்களில் பலர் சபையில் நிறைவேற்றப்படுகின்ற சட்டங்களை விளங்கிக் கொள்ள முடியாதவர்களாகவும் பாராளுமன்ற விவாதங்களில் உருப்படியான பங்களிப்பைச் செய்ய இயலாதவர்களாகவும் இருந்தனர். வெறுமனே அதிகாரத்தில் இருந்த ஜனாதிபதிகள் மீதான குருட்டுத்தனமான விசுவாசம் காரணமாகவே சட்டங்களுக்கு ஆதரவளித்தார்கள்.

கடந்த இரு தசாப்தங்களுக்கும் அதிகமான காலப்பகுதியில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்புச் செய்வதற்கும் அதிகரிப்பதற்கும் என்று மாறிமாறி கொண்டு வரப்பட்ட ஐந்து அரசியலமைப்பு திருத்தங்களையும் மனச்சாட்சியின் உறுத்தலின்றி ஆதரித்த பாராளுமன்ற உறுப்பினர்களை நாம் கண்டோம். அவர்களில் சில சட்டமேதைகளும் இருந்தார்கள்.

நாட்டின் மிகவும் உயர்ந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை வகித்த பிறகு சாதாரண பாராளுமன்ற உறுப்பினராக மீண்டும் அரசியலில் ஈடுபடும் ஒரு தரந்தாழ்ந்த நடைமுறையை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 2015 பாராளுமன்ற தேர்தலில் ஆரம்பித்து வைத்தார். அதற்கு பிறகு இன்னொரு முன்னாள் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவும் 2020 தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்கு வந்தார்.

தற்போது நாட்டில் ஐந்து முன்னாள் ஜனாதிபதிகள் இருக்கிறார்கள். அவர்களில் திருமதி குமாரதுங்க பதவியில் இருந்து இறங்கிய பிறகு அரசியலில் ஆர்வம் காட்டினாலும் கூட பாராளுமன்றத்துக்கு வருவதற்கு ஒரு போதும் அவர் முயற்சிக்கவில்லை. மற்றையவர்களில் எவருமே இந்த தடவை பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடவில்லை. மகிந்த மாத்திரமல்ல, சுமார் இருபது வருடங்களுக்கு பிறகு ராஜபக்ச சகோதரர்களில் எவருமே களத்தில் நிற்காத தேர்தலாகவும் இது அமைகிறது.

2022 மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு தங்களது வாக்குரிமையை பயன்படுத்துவதற்கு கிடைத்த முதல் வாய்ப்பைப் பயன்படுத்தி மக்கள் நல்ல பாடத்தை புகட்டியதன் காரணமாகவே இந்த முன்னாள் ஜனாதிபதிகள் மீண்டும் பாராளுமன்றத்துக்கு வரும் (22ம் பக்கம் பார்க்க)

# அநுரகுமார அலை என்ன செய்யும்?

(17ம் பக்கத் தொடர்ச்சி) ஆம், இலங்கையின் அண்மைய வரலாற்றில் மிக உச்சமான செல்வாக்கைப் பெற்ற தலைவராகியிருக்கிறார் அனுர. இப்படி அனுர புகழடைந்த அளவுக்கு அவருடைய தேசிய மக்கள் சக்தி அறிமுகமாகிருக்கிறதா? புகழடைந்திருக்கிறதா? அதனுடைய கொள்கை தெளிவாக்கப்பட்டிருக்கிறதா? என்றால், இன்னுமில்லையென்றே சொல்ல வேண்டும்.

இன்னும் அதற்கு நாடு முழுவதிலும் கட்டமைக்கப்பட்ட செல்வாக்கு மண்டலம் உருவாகவில்லை. இன்னும் அதைப் பற்றிய தெளிவான சித்திரம் பலருக்கும் தெரியாது. ஆக இதொரு திடீர் வீக்கமாகவே உள்ளது. என்னதான் ஆதரவு அலை NPPக்கு உருவாகியிருந்தாலும் பாராளுமன்றத் தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்துவதற்கு அது பொருத்தமான ஆட்களை தேடிக் கொண்டேயிருக்க வேண்டிய நிலை. இதனால் வடக்குக் கிழக்கிலும் மலையகத்திலும் அரசியலே என்னவென்று தெரியாதவர்களும் சில பிரமுகர்களும் நிறுத்தப்பட்டுள்ளனர்.

தெற்கில் ஓரளவுக்குச் சமாளிக்கக் கூடியதாக இருந்தாலும் வடக்குக் கிழக்கில் தகுதியான ஆட்களைத் தேடுவதில் அதற்குப் பிரச்சினை உண்டு. இதனால் வடிகட்டலைச் செய்ய முடியாமல் போய் விட்டது NPP க்கு. ஆக அனுரவின் மூலம், அவருடைய வெற்றியின் வழியே இப்பொழுது தேசிய மக்கள் சக்தி (NPP) பரவலாக அறியப்பட்டு வருகிறது. அதாவது ஏற்கனவே அது பெற்றிருந்த அறிமுகப் பரப்பை விட இப்போழுது அதனுடைய பரப்பெல்லை விரிவடைந்துள்ளது என்பது உண்மையே. பலரும் தங்களுடைய அரசியல் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வதற்கு முற்படுகின்றனர். இதனால் அடுத்து வரவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கூடுதலான ஆசனங்களைப் பெறக் கூடிய வாய்ப்புகள் உண்டு. அது எந்தளவுக்கு என்பதை இப்பொழுது சரியாக மதிப்பிட முடியாது விட்டாலும் ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வாக்குகளை விட கூடுதலான வாக்குகளை தேசிய மக்கள் சக்தி பெறும் என்பது உறுதி. அதில் வடக்குக் கிழக்கு வாக்குகளும் சேரக் கூடிய சூழலுண்டு. இது வடக்குக் கிழக்கில் தமிழ்த்தேசியவாதச் சக்திகளைப் பின்னுக்குத் தள்ளக் கூடியதாக அமையும்.

ஆகவே NPP ஆட்சியை வலுப்படுத்தக் கூடிய நிலையை நோக்கி நகர்கிறது எனலாம். அப்படி அமைந்தால் அது எப்படியான நிலை இலங்கையில் உருவாகும்? என்ற கேள்வி முக்கியமானது. வலுவான ஆதரவுத் தளம் இருந்தால் தான் NPP குறிப்பிட்டதைப் போல அல்லது திட்டமிட்டிருப்பதைப் போல மாற்றத்தை நோக்கிய முழுமையான ஆட்சியை வழங்க முடியும். மாற்று அரசியல் பண்பாடொன்று எழுச்சியடையும். ஊழல் வாதிகளின் மீது துணிந்து நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருக்கும். அப்படி அமையவில்லை என்றால், பலவீனமான அரசாங்கத்தினால் எதையும் செய்ய முடியாது போய்விடும். இழுபறிகளே தொடரும்.

அது இலங்கைக்கு நல்லதல்ல. பதிலாகப் பிராந்திய சக்திகளுக்கும் வல்லரசுகளுக்குமே (பிற சக்திகளுக்கு) மிக வாய்ப்பாகி விடும். இதை நோக்கியே இந்தியாவும் அமெரிக்காவும் காய்களை நகர்த்துகின்றன என்பது ஒரு சாராருடைய கருத்து. இதில் உண்மையுண்டு. இப்போதே பிராந்திய சக்திகளும் சர்வதேச வல்லரசுகளும் அதைச் செய்யத் தொடங்கி விட்டன. இதற்கு மாற்றுப் பார்வையுமுண்டு.

NPP க்குப் பேராதரவு கிடைக்குமாக இருந்தால் அது இரண்டு விதமாக நிலைமையை உருவாக்கும். ஒன்று, 1977 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்குக் கிடைத்த பலத்தைப் போன்ற ஒரு சூழலை ஏற்படுத்தும். அதற்குப் பிறகு கேள்விக்கிடமில்லாத வகையில் அது தனக்கேற்ற வகையில் அனைத்துத் தீர்மானங்களையும் அனைத்துத்திட்டங்களையும் தனித்து முன்னெடுக்கும். அதை விமர்சிக்கவோ தவறெனில் தடுத்து நிறுத்தவோ பிற சக்திகளால் இயலாமற் போய் விடும். இதனால் ஜனநாயகச் சூழல் கெட்டுவிடும்.

NPP யின் வரலாறு என்பது ஜே.வி.பியினுடைய வரலாறாகும். ஜே.வி.பி என்பது ஆயுதம் தாங்கியதோர் அமைப்பு. ஆயுதம் தாங்கிய அமைப்பில் என்னதான் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசினாலும் அதற்கப்பால் அதற்குள் ஒரு மூடுண்ட நிலை எப்போதுமிருக்கும். ஜே.வி.வி ஆயுத அரசியலை விட்டுப் பல ஆண்டுகளாகினாலும் அதனிடத்தில் இன்னும் அந்தக் கூறுகள் நிறைய உண்டு.

அதாவது ஆயுதமேந்திய இயக்கம் என்ற உள்ளுணர்வு. தன்னையே புனிதத் தரப்பாகக் கட்டமைத்துக் கொள்ளும் தன்மை. தாம் திட்டமிடுவதும் தீர்மானிப்பதுமே சரி. மற்றதெல்லாம் தவறு என்ற உணர்வு அவர்களிடம் எப்போதுமுண்டு. இதனால் தான் அது எவரோடும் கூட்டு வைத்துக் கொள்ளாமல் தனித்தே நிற்கிறது. தன்னைத் தூய்மையானதாகக் காட்டிக் கொள்ள முயற்சிக்கிறது.


இதெல்லாம் ஜனநாயக அரசியலை முன்னெடுக்கும் தரப்பினருக்கு (கட்சியினருக்கு) பொருத்தமானதல்ல. ஆனாலும் இதைப் புரிந்து கொண்டு தம்மை விரித்துக் கொள்வதற்கு தேசிய மக்கள் சக்தியினால் முடியாதிருக்கிறது. இந்த நிலையைக் கடக்க வேண்டிய யதார்த்தை NPP எதிர்கொள்ள வேண்டும். ஆட்சிக்கு வெளியே நின்று பேசுவது இலகு. ஆட்சியில் செயற்படுவது கடினம் என்ற உண்மையை NPP இப்பொழுது உணர வேண்டும்.

இதேவேளை இப்பொழுது நாட்டில் இரண்டு வகையான அரசியல் போக்கு உருவாகியுள்ளது. NPP யின் எழுச்சி அல்லது அலை. இந்தப் போக்கே இனிச் சில காலத்துக்குத் தொடரும். அடுத்த தேர்தலிலும் இந்த அடிப்படையிலான தேர்வே உண்டு. எப்படியென்றால் ஊழல்வாதிகள் — நேர்மையானோர் சரியானவர்கள் — தப்பானவர்கள் நல்லவர்கள் — கெட்டவர்கள் கறுப்பு — வெள்ளை தனித்துத் தனித்துவமாக நிற்போர் — கூட்டு வைத்திருப்போர் கூட்டணிகள் என.

இந்த எதிரொலிப்பு நாடு முழுவதிலும் பரவியுள்ளது. இதனால் தான் பல தலைவர்கள் தேர்தலிலேயே போட்டியிடாமலே ஒதுங்கியிருக்கின்றனர். மிஞ்சியோர் தேர்தல் மூலமாக ஓரங்கட்டப்படுவர். தமிழ்ப்பரப்பிலும் NPP யின் தாக்கத்தை உணர முடிகிறது. மாவை சேனாதிராஜா, விக்னேஸ்வரன் போன்றோர் ஒதுங்கியதும் இந்தத் தாக்கத்தினால் தான்.

இப்போது தமிழ்த் தேசியக் கட்சிகளே NPP யைக் கண்டு அஞ்சுகின்றன. நிச்சயமாக பொதுத் தேர்தலில் இதனுடைய பிரதிபலிப்பைக் காணலாம்.

அடுத்த வரப்போகிற மாகாணசபை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் எப்படியான தெரிவை மக்கள் செய்யப் போகிறார்கள்? என்பதே இலங்கையின் — NPP யின் — அனுரவின் வெற்றி — தோல்வியை முழுதாகத் தீர்மானிக்கும்.


வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  Give you solutions without bankruptcy.

CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency



Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# மத்திய கிழக்கின் போர்ப் பதற்றத்தை சாதகமாக்கிக் கொள்வது கமலா ஹரிஸா? டிரம்பா?

அமெரிக்க ஜனாதிபதிக்கான தேர்தல் களம் சூடு பிடித்துள்ள நிலையில் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் கமலா ஹாரிஸ் ஆகியோருக்கிடையிலான போட்டி மிகவும் வலிமையானதாக காணப்படுகின்றது.

சர்வதேச ரீதியிலும் அமெரிக்க அதிபர் யார் என்ற பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் தேர்தல் பற்றிய கருத்துக் கணிப்புகள் நகர்வதோடு, தேசிய அளவிலும் சமபலம் கொண்ட மாகாணங்களில் கடும் போட்டி நிலவி வருகின்றது. இதனடிப்படையில் அமெரிக்க அதிபரின் வெற்றி, மிகச்சிறிய வித்தியாசத்திலேயே தீர்மானிக்கப்படலாம் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இவற்றோடு புதிய வாக்காளர்கள் பலர் வாக்காளர் பட்டியலில் இணைந்துள்ளமையினால் அவர்களின் வாக்குகளையும் இணைத்து வெற்றியை தீர்மானிக்கக் கூடிய வாக்குகளாகப் பெறுவது எப்படி என கட்சியின் வியூகவாதிகள் கவனம் செலுத்தி வரும் நிலையும் காணப்படுகின்றது.

இக்கட்டுரை, மத்திய கிழக்கில் ஏற்பட்டு வரும் போர் பதற்ற நிலைமையை தனது வெற்றிக்கு சாதகமாக்கி வரும் கமலா ஹாரிஸின் நிலைப்பாட்டை தேடுவதாக அமையவுள்ளது.

பிரதான இரு வேட்பாளர்களின் கருத்துக் கணிப்பின்படி அதீத விருப்பு என்று எந்த நபரும் பெறாத நிலை காணப்பட்டு கொண்டிருக்கின்றது. சமபலத்துடன் கடுமையான போட்டி நிலவும் போது ஒன்று அல்லது இரண்டு சதவீதம் வித்தியாசம் கூட வெற்றியை தீர்மானிக்கும் வகையில் இருக்கும் என ரட்கர்ஸ் பல்கலைக் கழகத்தின் வரலாற்று ஆய்வாளர் டேவிட் க்ரீன் பெர்க் தன் கருத்தை கூறியுள்ளார்.

அமெரிக்கத் தேர்தல் களம் தொடர்பான கருத்துக்கள் முதன்மைப்படுத்திய போதெல்லாம் அமெரிக்க அரசியலில் பல அதிர்ச்சியான சம்பவங்கள் நடந்துள்ளமையினை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம் மீது இரு முறை கொலை முயற்சியும், அவருக்கு எதிரான வழக்கில் குற்றவாளி என தீர்ப்பும் கூறப்பட்டுள்ளது.

தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தன்னை விட இளம் வயதுடைய துணை ஜனாதிபதிக்கு ஆதரவாக போட்டியிலிருந்து விலகியுள்ளார். இவ்வாறான திருப்பங்களை தொடர்ந்து பொதுவாக தேர்தல் ஆண்டுகளிலே அக்டோபர் மாதம் பல நிகழ்வுகள் இடம் பெற்றமையானது தேர்தல் தொடர்பான கருத்துக்களை திருப்பி போடும் எனவும் சிலர் கூறுகின்றனர்.

இவற்றுள் குறிப்பாக 2016 அக்டோபரில் குடியரசு கட்சியின் வேட்பாளர் ட்ரம்ப் பெண்கள் குறித்து சர்ச்சைக் குரிய வகையில் பேசியதாக வெளியான வீடியோ மற்றும் ஜனநாயக கட்சியின் முன்னாள் ஜனாதிபதி வேட்பாளர் ஹிளாரி கிளின்டனின் மின்னஞ்சல் சர்ச்சை ஆகியனவும் வெளியாகின. இந்த அடிப்படையில் சர்ச்சைகளும் நெருக்கடிகளும் இரு தரப்பையும் சம அளவில் குழப்பமடைய செய்துள்ளது. இந்த அடிப்படையிலேயே போப் பிரான்சிஸ், குறைந்த தீமையை மக்கள் தெரிவு செய்து கொள்வார்களென, இரண்டையும் தீமையாக் அடையாளப்படுத்துகின்றார். இந்த பின்னணியிலேயே வரும் நவம்பர் ஐந்தாம் திகதி மாற்றத்தை ஏற்படுத்த மத்திய கிழக்கின் போர்ப் பதற்றத்தை சாதகமாக்கிக் கொள்ள எண்ணும் கமலா ஹாரிஸின் முயற்சிகளும் எண்ண





ங்களும் வலுவடைந்து கொண்டே வருகின்றது. முதலாவதாக, மத்திய கிழக்கில் தொடர்ச்சியாக ஏற்பட்டுக் கொண்டு வரும் போர்ப் பதற்றம் அதன் நெருக்கடி நிலை என்பன அமெரிக்க அரசியலில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. அமெரிக்காவின் தென்கிழக்கு பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் ஏற்பட்ட இந்த நெருக்கடி நிலைமையினை கையாளுதில் கமலா ஹாரிஸ் தனித்துவமாக செயல்படுகின்றார். தெற்கு லெபனானில் ஹிஸ்புல்லா படைகளுடன் இஸ்ரேலிய படைகளின் சண்டை மற்றும் இந்த வார ஆரம்பத்தில் இஸ்ரேல் மீது ஈரான் நூற்றுக் கணக்கான ஏவுகணைகளை ஏவியதால் காசா போர் வேறு ஒரு பரிணாமத்தில் மாறுவதற்கான வாய்ப்பு கொண்டுள்ளது.

மாற்றத்திற்கான வேட்பாளராக தன்னை முன்னிறுத்தும் கமலா ஹாரிஸ் அமெரிக்க இஸ்ரேல் கொள்கையென வரும் போது தற்போதைய நிர்வாகத்தில் இருந்து ஒதுங்கிக் கொள்ளாமல் தொடர்ச்சியாக தன் கவனத்தை மத்திய கிழக்கில் செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவதாக, அமெரிக்காவில் தேர்தல் இடம் பெறுவதற்கு முன்பாக காசாவில் போர் நிறுத்தம் ஏற்பட போவதில்லை என்பதை உணர்ந்த நிலையில் ஈரான் தாக்குதலுக்கு இஸ்ரேல் தரப்பின் பதிலடி முழுவீச்சிலான போருக்கு விட்டு செல்வதை தடுக்க வெள்ளை மாளிகை முயற்சி செய்து வருகின்றது.

இது குறித்து அதிபர் பைடன் குறிப்பிடும் போது, முழு வீச்சிலான போர் ஏற்படும் என நான் நம்பவில்லை என்கின்றார். அத்தோடு அதை நாம் தடுக்க முடியும் ஆனால் இன்னும் நிறைய செய்ய வேண்டியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார். இத்தகைய பைடனின் கருத்தை உறுதிப் படுத்துவதாக கமலா ஹாரிஸின் செயற்பாடுகள் உள்ளன. பொதுவாக தேர்தலில் வாக்களிக்கும் வாக்காளர்கள் அவர்கள் வாக்களிக்கும் போது அந்நாட்டின் வெளியுறவுக் கொள்கை பற்றி சிந்திக்க மாட்டார்கள். இதற்கு அமெரிக்காவும் விதிவிலக்கானதாகும்.

அமெரிக்காவின் வெளியுறவு செயற்பாடுகள், தேர்தல் நடத்தையில் செல்வாக்கு செலுத்தக்கூடியது. கமலா ஹாரிஸின் நகர்வுகள் மத்திய கிழக்கு - அமெரிக்க வெளியுறவு கொள்கை மீதான உந்துதலை ஏற்படுத்தி அதன் ஊடாக மக்களின் பொதுசன அபிப்பிராயத்தை சாதகமாக்கிக் கொள்வதாக அமைகின்ற போக்கினை அடையாளப்படுத்த முடிகின்றது. மூன்றாவதாக, மத்திய கிழக்கில் இடம் பெறும் போர் ஏனைய நாடுகளை விடவும் அமெரிக்காவில் அதிகம் தாக்கம் செலுத்தும் என்ற அடிப்படையில் இந்தப் போரின் விளைவுகள் அமெரிக்க ஜனநாயக கட்சியினருக்கும் சில விளைவுகளை ஏற்படுத்தும் தன்மையை வெளிப்படுத்தி உள்ளது.

அதாவது இஸ்ரேலுக்கு தொடர்ந்து ஆயுதங்களை விநியோகிப்பதில் கமலா



ஹாரிஸின் உறுதிப்பாடு மாற்றமற்றது என்பது ஜனநாயக கட்சியினருக்கு பெரும் பிரச்சனையாக அமைந்துள்ளது. இதன் ஒரு பகுதியாக மிக்சிகன் மாகாணத்தில் உள்ள அரபு - ட்ரம்ப் ஆதரவாளர்களுக்கு இடையே குழப்பம் ஏற்படும் நிலை காணப்படுவதோடு அது ஒரு உள் கலவரமாக நடக்கலாம் என்ற ஊகமும் காணப்படுகின்றது.

இந்நிலையில் மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக பொருளாதார ரீதியான நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது. ஈரானிய எண்ணெய் வளங்களை இஸ்ரேல் குறிவைக்கலாம் என்ற பைடனின் கருத்தினை தொடர்ந்து ஒரே நாளில் கச்சா எண்ணையின் விலை ஐந்து சதவீதத்திற்கு மேல் உயர்ந்துள்ளது. இதனால் பெட்ரோல் விலை உயர்ந்து உள்ளதாகவும், அமெரிக்கர்கள் கவலை தெரிவித்துள்ளனர். இந்நிலையில் மத்திய கிழக்கின் பதற்றத்தை குறைக்க முயலும் கமலா ஹாரிஸின் நகர்வுகள் குறிப்பிடத்தக்கது.

நான்காவதாக, மத்திய கிழக்கின் பதற்ற நிலை அமெரிக்க பொருளாதாரத்தில் பாதிப்பு செலுத்தலாம் என்ற அடிப்படையில் தேர்தல் களம் முழுவதும் பொருளாதாரத்தில் யார் சிறப்பாக பணியாற்று வார்கள் என்ற கேள்விகள் சமீபத்திய நாட்களில் அதிகமாக முதன்மைப்படுத் தப்படுகிறது. இதன்படி சி.என்.என் கருத் துக்கணிப்பு உட்பட பலரின் கருத்துக்கள் கமலா ஹாரிஸை விட ட்ரம்ப்க்கு ஆதரவாக இருந்தாலும் குக் பொலிடிகல் ரிப்போர்ட் இன் கருத்துப்படி பணவீக்கத்தை சிறப்பாக கையாள இருவரும் பொருத்தமானவர்கள் என்ற நிலைப்பாட்டின் அடிப்படையில் இருவருக்கும் சமபல ஆதரவு கிடைக்கப் பட்டுள்ளது.

இருப்பினும் கடந்த 2020ஆம் ஆண்டு ட்ரம்ப் தேர்தல் முடிவுகளை மாற்றி அமைக்க முயற்சித்ததாக கூறி சிறப்பு வழக்கறிஞர் ஜாக் ஸ்மித்தின் ஆவணத்தை நீதிபதி ஒருவர் வெளியிட்டுள்ளார். இதன் தொடர்ச்சியாகவே 2021 ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் திகதி நடைபெற்ற அமெரிக்க நாடாளுமன்றம் இருக்கும் கேப்பிடல் கட்டிடம் மீதான தாக்குதலில் ட்ரம்பின்




செயல்பாடுகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.


எனவே, ஜனநாயகத்தை காப்பது தொடர்பாக வாக்காளர்கள் ட்ரம்பை விட கமலா ஹாரிஸை ஆதரிப்பதாக சமீபத்திய கருத்துக்கள் கூறுகின்றன. குறிப்பாக சி.என்.என் கருத்து கணிப்பு கூறும் போது ட்ரம்ப் 40 சதவீதம் மக்கள் ஆதரவையும் கமலா ஹாரிஸ் 47 சதவீத மக்கள் ஆதரவையும் பெற்றுக் கொண்டிருக்கிறார்.

இருப்பினும் பெரிய அளவில் வித்தியாசம் ஏற்பட வாய்ப்பில்லை என்றும் சம போட்டி நிலவும் மாகாணங்களில் வாக்களிப்பு வித்தியாசம் பத்தாயிரம் அளவிலே காணப்படும் என்ற அடிப்படையிலேயே பொதுக்கருத்து காணப்படுகிறது. இப் பின்னணியில், ஏற்படும் சிறிய அளவிலான மாற்றமே வெற்றியை அளிக்கும் என்ற கமலா ஹாரிஸின் நிலைப்பாட்டில் உந்துதலை ஏற்படுத்துவதாக காணப்படுகின்றது. தற்போதைய ஆளும் தரப்பு என்ற அடிப்படையில், மத்திய கிழக்கின் மீதான நகர்வுகளை கமலஹாரிஸ் சாதகமாக கையாண்டு வருகின்றார். இதன் அடிப்படையிலே நவம்பர் மாத தேர்தல் முடிவுகள் எதிர்பாராத ஒன்றாக அமையும் என்ற கருத்து நோக்கத்தக்கது.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எடுத்த காரியம் உடனே முடியவில்லையே என்ற டென்ஷன் இருக்கும். எதிர்பாராத வீண் செலவு ஏற்படலாம். வீண்பழிவர வாய்ப்பு உள்ளதால் எதிலும் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல், வாடிக்கையாளர்களுடன் வாக்குவாதம் போன்றவை உண்டாகலாம். உத்யோகத்தில் மேலதிகாரிகளின் கெடுபிடிகளை சந்திக்க நேரிடும்.





ரிஷபராசி அன்பர்களே! அடுத்தவர் குற்றச் சாட்டுகளில் இருந்து சாமர்த்தியமாக விடுபடுவீர்கள்.வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. பணதேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டாலும் அதை சமாளித்து முன்னேறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளில் அலட்சியம் காட்டாமல் செயல் படுவது நல்லது





மிதுனராசி அன்பர்களே! கனவுகளால் தொல்லை ஏற்படலாம். சரியான நேரத்தில் தூங்க முடியாத சூழ்நிலை உருவாகும். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் பணத்தேவை ஏற்படலாம். கடன் விவகாரங்களில் கவனமாக செயல்படுவது நல்லது. உத்யோகத்தில் ஓய்வு இல்லாமல் பணியாற்ற வேண்டி இருக்கும். இயந்திரம், நெருப்பு, ஆயுதத்தை பயன்படுத்துவோர் மிகவும் கவனமாக இருப்பது அவசியம்.





கடகராசி அன்பர்களே! பூமி, வீடு தொடர்பான பிரச்னைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பாராதசெலவு உண்டாகலாம். தாயின் உடல்நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் திடீர் சிக்கல் ஏற்பட்டு சரியாகும். உத்யோகஸ்தர்கள் அலுவலக பொறுப்புகளை கவனமாக செய்வது நல்லது. இயந்திரங்களில் பணி புரிபவர்கள், ஆயுதங்களை கையாள்பவர்கள் எச்சரிக்கையாக செயல்படுவது அவசியம்.





சிம்மராசி அன்பர்களே! கோபமான பேச்சு, டென்ஷன் குறையும் வாரம். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். மனதில் துணிச்சல் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் பணியாளர்கள் மூலம் நன்மை கிடைக்கும். லாபம் கூடும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பரபரப்பு நீங்கி அமைதியாவர்.




கன்னிராசி அன்பர்களே! வேலைபளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். வயிறு தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டு நீங்கும். கை, கால் வலி, உடல் சோர்வு உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர். உத்யோகத்தில் சக ஊழியர்கள், மேல திகாரிகளுடன் அனுசரித்து செல்வது நல்லது. சுமாரான வாரம்.





துலாம் ராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தடங்கல் ஏற்பட்டு நீங்கும். வழக்கு விவகாரங்களில் தாமதமான போக்கு காணப்படும். நிர்ப்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும்போது கவனம் தேவை. உத்யோகத்தில் சக ஊழியர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவு உண்டாகும்.




விருச்சிகராசி அன்பர்களே! காரியங்கள் தடைபட்டாலும் பின்னர் நன்றாக நடந்து முடியும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல் தொழில் வியாபாரம் சீராக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைபளு, கூடுதல் பொறு ப்புகள் உண்டாகலாம். குடும்பத்தினரை அனுசரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்னைகளும் சரியாகும்.







தனுராசி அன்பர்களே! தடைபட்ட காரியங்களில் இருந்த தடை நீங்கி நன்றாக நடந்து முடியும். கொடுக்கல், வாங்கலில் இருந்த சிக்கல் தீரும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். போட்டிகள் குறையும். எதிர்பார்த்த ஆர்டர் வரும். கடன் பிரச்சனை கட்டுக்குள் இருக்கும். உத்யோகத்தில் உழைப்புக்கு ஏற்ற நல்ல பலன் கிடைக்கும்.




மகரராசி அன்பர்களே! தேவையற்ற மன சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும். வாடிக்கையாளர்களிடம் நிதானமாக பேசுவது நல்லது. எதிர்பார்த்த பணம் கைக்கு வருவதில் தாமதம் ஏற்படலாம். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகம் பற்றி யாருடனும் விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது. குடும்பத்தினரின் செயல்பாடுகள் உங்களுக்கு டென்ஷன் தரும். தரும்.




கும்பராசி அன்பர்களே! பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்னைகளில் சாதகமான நிலை காணப்படும். தானதர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரலாம். பயணத்தின் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் நிதானமான போக்கு காணப்படும். உத்யோகத்தில் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது.




மீனராசி அன்பர்களே! எல்லா வற்றிலும் சாதகமான பலனே கிடைக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி வேகம் பிடிக்கும். எதிர்பார்த்த ஆர்டர் கிடைக்கும். லாபம் கூடும். உத்யோகத்தில் இருப்பவர்களின் செயல்திறன் அதிகரிக்கும். மேலதிகாரிகளின் பாராட்டும்.உயர்வும் கிடைக்கும். புதிய வேலை தேடுபவர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் புகட்டிய பாடத்தினால்

(19ம் பக்கத் தொடர்ச்சி) ஆசையை அடக்கிக் கொண்டார்கள். பாராளுமன்ற தேர்தலுக்கு பிறகு மேலும் பல அரசியல்வாதிகள் தங்களது ஓய்வை அறிவிப்பார்கள் என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

தங்களது எதிர்காலத்தைப் பாழாக்காத ஒரு பாராளுமன்றத்தை தெரிவு செய்வதில் மக்கள் இந்த தடவை மிகவும் விவேகத்துடன் நடந்து கொள்ள வேண்டும் தங்களது தவறான ஆட்சி முறைக்கு அரசியல்வாதிகள் மக்களைக் குறை கூறியதும் உண்டு.

மக்கள் கிளர்ச்சியின் உச்சக்கட்டத்தில் 2022 ஜீன் 9 ஆம் திகதி தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்த முன்னாள் நிதியமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தாபகருமான பசில் ராஜபக்ச தங்களுக்கு வாக்களித்து ஆட்சிக்கு கொண்டு வந்த மக்களும் பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பேற்க வேண்டும் என்று செய்தியாளர்கள் மகாநாட்டில் கூறியதை எவரும் மறந்திருக்க மாட்டார்கள்.

தங்களது தவறுகளுக்காக மக்கள் மீது ஊழல்தனமான அரசியல்வாதிகள் பழிசுமத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற போதிலும், மீண்டும் மீண்டும் மக்கள் தவறான ஆட்சியாளர்களை தெரிவு செய்து வந்திருக்கிறார்கள் என்ற உண்மையையும் மறுப்பதற்கில்லை. மக்கள் கிளர்ச்சிக்கு பின்னரான காலப்பகுதியில் மக்களின் அரசியல் சிந்தனைகளில் ஏற்பட்ட மாற்றத்தை ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் தெளிவாகப் பிரதிபலித்தன.

அதன் பின்புலத்தில், மக்கள் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் பெருமளவுக்கு விவேகமான முடிவை எடுப்பதற்கான தெளிவான அறிகுறிகள் தென்படுகின்றன. நேர்மையான வர்களை மாத்திரமல்ல, கொள்கை வகுக்கும் செயன்முறைகளில் பயனுறுதியுடைய பங்களிப்புகளை வழங்கக்கூடியதாக பாராளுமன்ற விவகாரங்களில் அறிவைக் கொண்டவர்களையும் மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

சட்டமூலங்களில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்பதையோ அல்லது சபையில் விவாதிக்கப்படும் விடயம் என்ன என்பதையோ விளக்கிக் கொள்ள முடியாதவர்களும் மக்கள் பிரதிநிதிகளாக சலுகைகளை அனுபவித்துக் கொண்டு இருந்தார்கள். வெறுமனே உணர்ச்சிவசமான சுலோகங்களுக்கு எடுபடுகின்ற போக்கில் இருந்து மக்கள் முற்றாக விடுபடவேண்டும்.

பொதுவாழ்வைத் தூய்மைப்படுத்துவதற்கு படிப்படியாக முன்னெடுக்கப் படவேண்டிய பணிகளில் மக்கள் விவேகமான முறையில் தங்கள் பங்களிப்பை வழங்குவதற்கு கிடைத்திருக்கும் ஒரு நல்ல வாய்ப்பாக இந்த தடவை பாராளுமன்ற தேர்தல் அமைகிறது.

## மீண்டும் வலுக்கும் கனடா - இந்தியா பிரச்சனை!

(9ம் பக்கத் தொடர்ச்சி0 இந்தியாவுக்கு எதிரான பிரிவினைவாதத்தை வெளிப்படையாக ஆதரிக்கும் ஒரு கட்சியைச் சார்ந்து இருக்கின்றது என்றும் இந்தியா கூறியிருந்தது.

செப்டம்பர் 4-ஆம் தேதி, ஜஸ்டின் ட்ரூடோவின் அரசாங்கத்திற்கு அளித்த ஆதரவை வாபஸ் பெறுவதாக புதிய ஜனநாயக கட்சியின் (NDP) தலைவர் ஜக்மீத் சிங் அறிவித்தார். புதிய ஜனநாயகக் கட்சியின் ஆதரவுடன் ட்ரூடோ அரசாங்கம் இயங்கி வந்தது. அக்கட்சி வாபஸ் பெற்ற போதிலும், நாடாளுமன்றத்தில் நம்பிக்கைத் தீர்மானத்தை ட்ரூடோ வென்றார்.

கனடாவில் அக்டோபர் 2025ஆம் ஆண்டு பிரதமர் தேர்தல் நடைபெற இருக்கிறது. அங்குள்ள சீக்கியர்களின் ஆதரவை பெற வேண்டும் என்று ட்ரூடோ விரும்புகிறார். ஜஸ்டின் ட்ரூடோ 2015-ஆம் ஆண்டு முதல் ஆட்சியில் உள்ளார். 2019 மற்றும் 2021-ஆம் ஆண்டுகளில் ட்ரூடோவின் கட்சி பெரும்பான்மை பெற முடியாமல் வேறு கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியில் இருக்கிறது. ஜக்மீத் சிங்கின் ஆதரவுடன் ட்ரூடோவின் ஆட்சி நடப்பதை இந்தியா நல்ல முறையில் பார்க்கவில்லை.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஜக்மீத் சிங்கின் கட்சி கடந்த பொதுத் தேர்தலில் 24 இடங்களில் வெற்றி பெற்று, ஆட்சி அமைப்பதை முடிவு செய்யும் பொறுப்பில் இருந்தது. இந்தியாவைப் பல சந்தர்ப்பங்களில் ஜக்மீத் சிங் விமர்சித்து வருகிறார்.

2022-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், ஜக்மீத் சிங், 'இந்தியாவில் இஸ்லாமியர்களைக் குறி வைக்கும் வன்முறையின் படங்கள், வீடியோக்களைப் பார்த்து நான் கவலைப்படுகிறேன். மோதி அரசாங்கம் இஸ்லாமியர்களுக்கு எதிரான உணர்வுகளைத் தூண்டுவதை நிறுத்த வேண்டும். மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.' என்று கூறியிருந்தார். ஜக்மீத் சிங்கின் வம்சாவளி பஞ்சாபின் பர்னாலா மாவட்டத்தில் உள்ள திக்ரிவால் கிராமத்துடன் தொடர்பு கொண்டது. அவரது குடும்பம் 1993-ஆம் ஆண்டு கனடாவுக்குக் குடிபெயர்ந்தது. இந்தியாவில் 1984-ஆம் ஆண்டு நடந்த சீக்கியர்களுக்கு எதிரான கலவரம் குறித்து ஜக்மீத் சிங் எப்போதும் குரல் கொடுத்து வருகிறார். இந்திரா காந்தியின் உருவ பொம்மையைச் சுடுவது போன்ற கனடாவில் நடந்த பல நிகழ்வுகளுக்கு இந்தியா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

2013-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், ஜக்மீத் சிங்கிற்கு அம்ரித்சர் செல்ல விசா வழங்க இந்திய அரசு மறுத்தது. இதனை அடுத்து அவர் 'தி டைம்ஸ் ஆஃப் இந்தியா' நாளிதழுக்கு அளித்த பேட்டியில், '1984 கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி குறித்து நான் பேசுகிறேன், அதனால் இந்திய அரசாங்கம் என் மீது கோபமாக உள்ளது. 1984 கலவரங்கள் இரண்டு சமூகங்களுக்கிடையில் நடந்த ஒரு கலவரம் அல்ல, அது அரசின் ஆதரவில் நடந்த ஒரு இனப்படுகொலை.' என்று அவர் கூறினார்.

'தி வாஷிங்டன் போஸ்ட்' செய்தித்தாளின்படி, ஜக்மீத் சிங் அக்கட்சியின் தலைவராவதற்கு முன்பு காலிஸ்தான் பேரணிகளில் கலந்து கொள்வார் என்பது தெரிய வந்தது. பரப்பளவில் உலகின் இரண்டாவது பெரிய நாடான கனடாவில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் அதிக அளவில் உள்ளனர். கனடாவின் மக்கள் தொகையில் சீக்கியர்கள் 2.1% உள்ளனர். கடந்த 20 ஆண்டுகளில், கனடாவில் சீக்கிய மக்கள் தொகை இரட்டிப்பாகியுள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் கல்வி, தொழில், வேலை போன்ற காரணங்களுக்காகப் பஞ்சாபிலிருந்து கனடாவிற்கு இடம்பெயர்ந்தவர்கள்.

வான்கூவர், டொராண்டோ கேல்கரி உட்பட கனடாவில் உள்ள பல பகுதிகளில் அவர்கள் வசித்து வருகின்றனர். சீக்கியர்களின் முக்கியத்துவத்தை ஜஸ்டின் ட்ரூடோ நன்கு அறிந்தவர் என்று அவரது முதல் பதவிக் காலத்தில் இருந்தே அறியலாம். அப்போது அவரது அமைச்சரவையில் நான்கு சீக்கிய அமைச்சர்கள் இருந்தனர். சீக்கியர்களிடம் தாராள மனப்பான்மை கொண்ட கனடா பிரதமர் ஜஸ்டின் சிங் ட்ரூடோ என்றும் அவர் அழைக்கப் படுகிறார். நன்றி:- பிபிசி

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

---

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# தமிழர் தாயகத்தில் தமிழரசுக்கட்சியினால் தான் தமிழ்மக்கள் தனித்துவமாக வாழ்கின்றார்கள்

தமிழரசுக்கட்சி ஒன்று இருப்பதன் காரணமாகவே இந்த மண்ணில் தமிழ் மக்கள் தனித்துவமாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பதை மறந்து விடக்கூடாது என இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சியின் ஊடாக எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் கூட்டம் கடந்த 13 ஒக் 2024 ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு செங்கலடியில் நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் ஏறாவூர்ப்பற்று கிளையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு செங்கலடி சௌபாக்கியா மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழரசுக்கட்சியின் முன்னாள் செயலாளர் கி.துரைராஜசிங்கம் தலைமையில் நடை பெற்ற இந்த கூட்டத்தில் இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளர் இரா.சாணக்கியன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இதன் போது தமிழரசுக்கட்சியின் ஊடாக எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன் அவர்கள் ஆதரவாளர்களினால் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஞா.சிறிநேசன், தமிழரசுக்கட்சி தமிழர்களுக்கு என்ன செய்தது என்பதை அனைவரும் இலகுவாக கேட்பார்கள். ஆனால் தமிழரசுக்கட்சி ஒன்று இருப்பதன் காரணமாகத் தான் இந்த மண்ணில் தமிழர்கள் தனித்துவமாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது என்பதை மறந்து விடக்கூடாது.

புத்தளம் நீர்கொழும்பு பகுதிகளில் தமிழர்கள் வாழ்ந்த நிலையில் அங்கு தமிழரசுக்கட்சியின் ஆதிக்கம் குறைந்து தேசிய கட்சிகளின் ஆதிக்கம் அதிகரித்த காரணத்தினால் அங்கு வாழ்ந்த தமிழர்கள் அரைகுறை தமிழர்களாக, தமிழை மறந்தவர்களாக மாறியிருக்கின்றார்கள்.

ஆனால் வடகிழக்கில் 1949ஆம் ஆண்டு தொடக்கம் எமது கட்சி ஆற்றிய பணிகள் காரணமாக தமிழர்கள் இன்றும் தனித்துவமாக தமது பண்பாடுகளுடன் தலை நிமிர்ந்து நிற்கின்றார்கள் என்பதை மறக்க கூடாது. தமிழரசுக்கட்சியானது உரிமையா சலுகையா எனக்கேட்கின்ற போது எங்களுக்கு உரிமைவேண்டும் என்று சொல்லுகின்ற கட்சியாகும்.

### அம்பாறையில் வாக்கினைச் சிதைக்க மீண்டும் சூழ்ச்சி

போராட்டத்தை சிதைத்தவர்கள் இன்று வீட்டு சின்னத்தை சிதைக்க அரசியல் ரீதியாக பல செயற்பாடுகளை முன்னெடுப்பதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளரரும் பாராளுமன்ற தேர்தல் வேட்பாளருமாகிய கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீட்டு சின்னத்தை எந்த காலத்திலும் யாராலும் மறைக்க முடியாது. வடகிழக்கு தமிழர்களுக்கு இருக்கும் ஒரே ஒரு தாய் கட்சி தமிழரசு கட்சிதான் கடந்த பாராளுமன்ற தேர்தலில் கப்பல் சின்னத்தில் ஒருவர் வந்து மக்களை மூளைச்சலவை செய்து முப்பதாயிரம் வாக்குகளை வீணடித்தார் இதனால் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் பிரதிநிதித்துவம் இழந்து அரசியல் அநாதையாக்கப்பட்டனர்.

இதனை கருத்தில் கொண்டு தமிழரசுக் கட்சி தேசிய பட்டியலை அம்பாறை மாவட்டத்திற்கு வழங்கியது. இம்முறை பொதுத் தேர்தலில் மாற்று கட்சிகள் அம்பாறை மாவட்டத்தில் வேட்பாளர்களை நிறுத்த பல பிரயத்தனங்களை மேற்கொண்ட போது எம்முடன் இணைய பலர் விண்ணப்பித்தனர்.

இந் நிலையில் மக்கள் செல்வாக்குள்ள மக்களுக்கு பக்கச்சார்பின்றி சேவை வழங்க கூடிய இளைஞர்களுக்கு தமிழரசுக் கட்சி அம்பாறை மாவட்டத்தில் இடம் வழங்கியுள்ளது. அத்துடன் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டிய பிரதிநிதி மாற்று இனத்தவருக்கு இனத்தவருக்கு கிடைத்த வரலாற்றை நாம் சிந்திக்க வேண்டும்.

இம் முறையும் தமிழ் மக்களின் வாக்குகளை சிதைத்து பிரயோசனம் இல்லாமல் செய்ய மீண்டும் ஒருவர் படகில் வருகின்றார்.

தேசிய பட்டியலுக்காக தமிழ் மக்களது வாக்குகளை பிரித்து கட்சிகளுக்கு வழங்க அரசியல் ரீதியான நடவடிக்கை இடம் பெறுவதாகவும் மக்கள் இதனை உணர்ந்து செயற்பட வேண்டும் என்றார்.



THE TAMIL MIRROR October 15, 2024

தமிழ் மிரர்
Tamil Mirror
YOUR BUSINESS FOR GROWTH...
MIRROR THAT REFLECTS THE TAMIL COMMUNITY

You're Welcome



Prof. V. Sangara Narayanan Chief Guest
முனைவர் வே. சங்கர நாராயணன்

# 19 வது ஆண்டு விழா

## 19th year celebrations






# விருது விழா

## Awards Gala

3 வது முப்பாட்டன் முருகன் விழா

3rd Muppattan Murugan Vizha



# NOVEMBER 2024

# 03

## Sunday

4.30 pm

**Chinese Cultural Centre,**
5183 Sheppard Ave East. Tel: 416-697-0126